1485

பிஸ்மில்லா ஹிர் றஹ்மா னிர் றஹீம்

OFFICE OF THE REGISTRAR
10 DEC 1924
MADRAS

இது
நபிகள் நாயகம் சல்லல்லாஹு அலைஹிவ
சல்லம் அவர்கள் காலத்திலிருந்த
ஸஹாபிகளில் ஒருவரான

பலுலூன் ஸஹாபி கிஸ்ஸா.

இது
முன்னோர்களால் கோர்வை செய்யப்பட்டு
கைப்பிரதியாக இருந்ததை
இராணிப் பேட்டை
ஜனுப் மௌலவி முஹம்மது இப்ராஹீம் ஆலிம் சாஹிபு
அவர்களால் எழுதிப் பார்வையிட்டும்,

இந்த கிதாபின் காத்திமா முடிவில் சிற்சில நஸிஹத்து,
தௌபா, வாலு முதலிய பயான்களை
ஜனுப் காஜா முஹம்மது ஆலீம் சாயபு
அவர்களைக்கொண்டு எழுதிசேர்த்தும்

சென்னை, தருமசீலன் அச்சுக்கூடத்தில்
அச்சிட்டு வெளியாக்கப்பட்டது.

லு] 1924 [அணா 1.

(ரிஜிஸ்டர் காப்பிரைட்)

Q7:417
N24
18/246

(பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்)

பஹுலூன் ஸஹாபி கிஸ்ஸா.

அல்ஹம்து, லில்லாஹி, றப்பில், ஆலமீன், வல்ஆகி பது,லில், முத்தகீன், வஸ்ஸலாது, வஸ்ஸலாமு, அலாறசூலிஹி, ஸையிதினா, முஹம்மதின், வஆலிஹீ, வஅஸ்ஹாபிஹீ, அஜ்மஈன்.

அம்மாபஅது

நபிகள் நாயகம் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய காலத்தில் (பஹுலூன்) என்று ஒரு ஸஹாபி மதீனாவில் இருந்தார். அவர் மிகு பேணுதலுடையவரும் (சுஹ்து) என்னும் துன்யாவை வெறுத்த தக்வாவை உடையவராகவும், இன்னும் அவர் பகலெல்லாம் நோன்பாளியாகவும், இரவெல்லாம் நின்று வணங்குகிறவராகவும் இருந்தார். அவர் பேரில் நபி நாயகம் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் மிகுந்த கிருபை யுடையவர்களாக இருந்தார்கள். மேலும் அவருடைய அமலை, (உலுல் அஸ்மு) என்னும் நபிகளுக்கு ஒப்பாக்கி புகழ்ச்சிக்கிறவர்களாகவு மிருந்தார்கள். அந்தக் காலத்தில்; அவருக்குஅழகில் ஒப்பானவர்கள் ஒருவருமில்லை. அப்படி இருக்கும்போது ஒருநாள் நபி சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களிடத்தில் சில ஸஹாபிகள் வந்து, அல்லாவுடைய றசூலே! நம்முடைய பஹுலூன் வெளியில் புறப்பட்டாலேயானால், அவருடைய அழகைப் பார்ப்பதற்காக பெண்களெல்லாம் வெளியில் வந்து விடுகிறார்களென்று முறைப்பாடு செய்தார்கள். அப்போது நபி நாயகம் சல்லல்லாஹு அலைஹிவசல்லம், அவர்கள் பஹுலூன் ஸஹாபியை அழைத்து நீர் இனிமேல் முகமூடி இட்டுக் கொள்ளுமென்று உத்திரவு செய்தபோது அப்படியே அவர் முகமூடி இட்டுக் கொண்டார். இதற்குமுன் அவர் வெளியில் புறப்பட்டாரேயானால் பஹுலூன் வருகிறாரென்று சிறுபிள்ளைகளெல்லாம் சத்தமிடுவார்கள். அது கேட்டு வீட்டில் இருக்கும் பெண்கள் வெளியில் வந்து அவரைப் பார்ப்பார்கள். இவர் முகமூடி இட்டபின் அவை இரண்டும் நின்றுவிட்டன.

இவ்வாறே நபி சல்லல்லாஹு அலைஹிவ சல்லமவர்களின் காலத்திலும், அபூபக்கர் ஸித்தீகு, றழியல்லாஹு அன்ஹுவுடைய காலத்திலும் நடந்துவந்தது. பின்னர் உமறுபுனுல் கத்தாபு, றழியல்லாஹு அன்ஹுவுடைய காலத்தில் ஒருபடைத் தலைவரான அமீர் மகளை அவருக்கு (நிகஹு,) செய்துகொடுக்க அவரிடம் தூதனுப்பப்பட்டது. அதற்கு பலுலூன் சொன்னதாவது; எனக்குப் பெண்கொள்ள ஹாஜத்தில்லை, அப்பெண்ணை வைத்து நிருவாகம் பண்ணுவதற்கு என்னால் சக்தியுமில்லை, ஆகையால் நீங்கள் இந்த எண்ணத்தை விட்டுவிடுங்கள்; இனி ஒருவரும் இது விஷயமாக என்னிடம் ஆள் அனுப்பவேண்டாம், இதனால் நான் உங்களுடைய சொல்லுக்கு விரோதமான ஜவாபு சொன்னேனென்று மனவருத்தமும் வேண்டாமென்று அந்தப்படைத் தலைவராகிய அமீருக்கு மிகவும் மரியாதையுடன் ஜவாபுசொல்லி அனுப்பிவிட்டார். அதுகேட்டு அந்த அமீரானவர் மிகவும் விசனமுற்று சொன்னதாவது; இவர் நிருவாகத்தில் (மஷக்கத்) வறுமையுடையவரென்றும் நம் இனத்தாரென்றும், சாலிஹான மனிதரென்றும், நாம் அவரைத்தேடினோம். அவர் நம்முடைய சொல்லைத் தட்டிவிட்டார், இதற்குமேல் அவருடைய இஷ்டமென்று சொல்லிவிட்டுச் சும்மா இருந்து விட்டார்.

இது சங்கதி அமீரின் மகளுக்குத் தெரியவந்து, அவள் மிகவும் விசனமடைந்து அவர்பேரில் அவள் ஆசைகொண்டிருந்தபடியால் அவர் நம்மைப் பார்த்தாரேயானால் ஒருசமயம் நம்பேரில் ஆசையாவார் என்றெண்ணி பலுலூனுடைய அயல்வீட்டாருடன் அதிக முஹப்பத்தாய் அவர்களுடைய வீட்டிற்குப் போகவர இருந்தாள். அப்போது பலுலூனை அவள் காணவும் அவளை பலுலூன் காணவுமாக இருந்தார்கள். சிலநாள் சென்றபின் அவள் சில மனிதரைக் கொண்டு அவருக்கு ஆசை பூட்டினாள். அப்போது அவர் அமீருடைய மகளின் தூதருடைய சொல்லுக்கு வழிப்படவில்லை. அதையவள் அறிந்ததும், அவர் வீட்டுக்குத் தானே போய் அவருடைய எதிரில் நின்றுக்கொண்டு என்னுடைய வள்ளலாகிய நாயகமே! நீங்கள் என்னை நிகாஹு செய்துக்கொள்ள வேணுமென்ற பிரியம் எனக்கு அதிகமாயிருக்கிறது; உங்கள் பேரிலுள்ள ஆசையால் எனக்கு பகல் இரவாகவும் இரவு பகலாகவும் நான் துலைந்துக்கொண்டு போகிற[illegible]ங்களுடைய இனத்தில் உள்ளவள், உங்களைப் போல் (அஷ்றுபின்) என்னும் உயர்ந்த குலத்திலுள்ளவள், உங்கள் மேலுள்ள ஆசையால் என்னுடைய வெட்கத்தை எடுத்தெறிந்து

181246

விட்டு உங்கள் சமுகத்தில் வந்தேன், என்னை விரட்டிவிடாமல் என் நாட்டப்படி நல் உத்திரவுகொடுத்து என்னை அனுப்பிவைக்கும்படிக்கு உங்களுடைய மேலான சமுகத்தில் மிகவும் கேட்டுக் கொள்கிறேன், என் நாட்டம்போல் நல்லவார்த்தை கொடுத்தீர்களானல் உங்களின் சமுகத்தில் அனுப்பவேண்டிய மனிதர்களை அனுப்பிவைத்து பேச்சைத் திட்டம் பண்ணிக்கொள்ளச் சொல்லுகிறேன் என்று சொன்னாள். அப்போது பஹுலூன் என்கிறவர் அவளுடைய பேச்சுகளைக்கேட்டு மிகவும் மனமிரங்கி கிருபையுடன், ஓ! அமீருடைய மகளே! உன்னுடைய நாட்டத்தையும், உன் பேச்சையும் கேட்டு என்னுடைய மனது உருகிப்போயிற்று. ஏனெனில்; இது விஷயம் பிள்ளைகளுக்கு தாய் தகப்பன்மார் பெண் மாப்பிள்ளையென்று பேசவேண்டிய வழக்கம். இப்போது நீ என்பேரில் கொண்ட ஆசையால் வெட்கத்தை விட்டெறிந்து என் முன்னே வந்து என்பேரில் அதிக ஆவலாய் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுகிறாய், இதற்கு நான் எப்படி ஜவாபு சொல்லாதிருப்பேன்? ஆனால் நானோ ஏழை பகீரானவன், நீ சீமானுடைய மகள், நீ பெண்பிள்ளைகளில் புத்திசாலியானவள், சூறத்தால் அழகானவள், துன்யாவிற்கு வேண்டியவைகளெல்லாம் உன்னிடத்திலிருக்க உன் சொல்லை நான் கபூல்செய்யாமல் இருப்பது எப்படி? கல்நெஞ்சுடையவனும் உன்னுடைய அமுர்தமான மொழிகளைக் கேட்டால் அவனுடைய மனது இளகிவிடும், வாலிபத்தையும் அழகையும் பத்தினிதனத்தையும் வங்கிஷத்தையும் அமுர்தமான வார்த்தையையுமுடைய ஒருபெண் என்போல்கொற்ற ஏழை பகீரின்பேரில் ஆசை வைப்பதானல் அநேக சுகமாகிய நிஅமத்தை அவன் பெற்றுக்கொள்வான்.

அப்படி இருக்க அத்தகைய சுகத்தைவிட்டு துக்கத்தையும் கஷ்டத்தையும் தெரிந்துக்கொள்வானு? தவிர, இந்த மதீனு நகரிலுள்ள எத்தனை எத்தனை அமீருடைய மக்களும் சீமான்களும் உன்னை நாடுவார்கள்? நீ இந்த பகீரின்பேரில் ஆசைகொண்டு இப்படி பேசுகிறது சரியல்ல. நானுகிறவன் பரதேசியானவன், மனிதர் மக்கள் அற்றவன், நிகாஹில் நாட்ட மில்லாதவன், பெண்ணுசையை நீக்கியவன், பெண்கொள்ள எனக்கு சக்தி இருக்குமாகில் உன்னை நான் விட்டுவிடுவேனு? ஆகையால் என்னைப்பற்றிய நாட்டத்தை நீ விட்டு (ஸபூரு) என்னும் பொறுமை செய்துக்கொள், கொஞ்சநாளையில் உன்னுடைய மனதுக்கு நேர்மையான மாப்பிள்ளை உன்னைவந்து நிகாஹு செய்துக்கொள்வான், நானும் ஹல்லாகுதஆலாவினிடத்

தில் அதற்காக (துஆ) செய்கிறேன், உன் தகப்பனுக்கும் சொல்லி உன்போல்கொத்த அந்தஸ்துடையவர்களில் உனக்கு மாப்பிள்ளை தேடுவதில் நானும் சேர்ந்து முடித்துவைக்கிறேன்" என்று மிகவும் அமிர்தமான வார்த்தையால் அமீர்மகளுக்கு பஹுலூன்சொன்னார். அப்போது அமீரின்மகள் பஹுலூனுடைய வார்த்தையைக் கேட்டு மிகவும் திடுக்கமுற்றவளாய், பஹுலூனிடம் சொல்லத்தொடங்கினாள்; "என் வெட்கத்தை விட்டெறிந்து நான் உங்கள்பேரில் ஆசையாய் இப்படிக்கெல்லாம் சொல்லியும் உங்கள் மனம் இரங்கவில்லை. நான் உங்களை விடமாட்டேன் எப்படியாவது உங்களைப் புருஷனாக்கி எடுத்துக்கொண்டாலே ஒழிய என் ஆசைதீராது" என்றாள். அப்போது பஹுலூன் "நான் உனக்கு நேரானவார்த்தையைப் போதித்தும் நீ அதைக் கவனிக்கவில்லை. இதற்குமேல் உன் சவாலுக்கு என்னிடத்தில் ஜவாபு இல்லை" யென்று சொல்லிவிட்டு சும்மா இருந்துவிட்டார். பின்னும் அமீரின்மகள் மிகவும் பேசினாள்; அவர் ஒன்றுக்கும் ஜவாபு சொல்லாமலிருந்துவிட்டார். பின்பவள் ஆசை முறிந்தவளாகி திரும்பிவந்து யோசித்தாள். எவ்வாறெனில்; இரவு காலத்தில் அவர் தனித்து அமல்செய்யுமிடத்தை நாம் கண்டறிந்து அங்கேபோய் தனியேகண்டு பேசி பணம்காசைக் காண்பித்து நம்முடைய சரீரத்தின் அழகையும் அவருக்கு வெளியாக்கிவைத்தால் அவருக்கு ஏற்பட்டிருக்கிற கஷ்டத்தை அனுசரித்து சுகத்தை நாடி பெண் கொள்வதில் ஹாஜத்தாவார்; இன்னும் நம்முடைய சரீரத்தை அவர் காண்கிறதுகொண்டு வாலிபத்தின் (இஷ்கு) என்னும் ஆசைமீறி நம் கைவசமாவாரென்று எண்ணங்கொண்டு அவருடைய அயல்வீட்டாரைக்கண்டு பஹுலூன் இரவுகாலத்தில் வீட்டில் இருக்கிறாரா? அல்லது வீட்டைவிட்டு வெளிப் புறப்பட்டு போகிறாரா வென்று வினவினாள்.

அப்போது அவர்கள் "பஹுலூனுடைய வழக்கமாகிறது இரவு காலங்களில் அரவம் அடங்கியபின் வீட்டைவிட்டு வெளியேறிப் போகிறார்; சுபுஹு நேரத்துக்குப் பின் வருகிறார், அவர் எங்கே போகிறாரோ தெரியவில்லை" யென்று சொன்னார்கள். அது கேட்டு அவள், நாம் அவரைத் தனியே தொந்திரவு பண்ணினால் வழிப்படுவாரென் றெண்ணி மறுநாள் தீனாறு திருஹமும் உள்ள ஓர் பணப்பையை கையில் எடுத்துக்கொண்டு இராவானபின் அவருடைய அயல்வீட்டு வாயிலில் போயிருந்து பஹுலூன் வெளியே புறப்படுவதை வழிபார்த்துக் கொண்டிருந்தாள். அப்போதவர்

சுமார் பதினொன்றுமணி நேரத்துக்குப் பின் வெளியே புறப்பட்டு பள்ளிவாசலை நோக்கி நடந்தார். இதற்கிடையில் அவள் பின் தொடர்ந்துபோய் பாதையில் தனித்த இடத்தில் பஹ்லூனை வழி மறித்துக்கொண்டு, "என்னை நீங்கள் நிகாஹ் செய்துக் கொள்ளாதவரையில் உங்களை நான் ஹயாத்தாயிருக்கும் காலமெல்லாம் விடமாட்டே"னென்று சொல்லி, அவள் கொண்டுவந்த ஐநூறு திருஹமத்துடைய பையை அவர் கையில்வைத்து "நீங்களிதை எடுத்துக் கொள்ளுங்கள், இதுபோல் அநேகம் பொருள் தங்களுக்கு பின்னும் கொடுக்கிறேன், நீங்கள் என்பேரில் அதிக கிருபைவைத்து என்னை (நிகாஹ்) செய்துக்கொள்வதாக எனக்கு நல் உத்திரவு கொடுங்க"ளென்று மிகவும் கேட்டுக்கொண்டாள். அதற்கு பஹ்லூன் றலியல்லாஹு அன்ஹு அவர்களந்தப் பணப்பையை கையால் பிடிக்கவுமில்லை, அப்பால் அவள் அவருக்கு (ஷஹ்வத்) என்னும் இச்சையுண்டாகும்படிக்குள்ள செய்கைகளைக்கொண்டு பதினொருமணி தொடுத்து மூன்றுமணி வரையில் அநேகவிதமான தொந்தரவு செய்தும் அதற்கு அவர் இணங்காமல் இருக்கும்போது, பஜ்று நேரம் சமீபித்துவிட்டது. அப்போது அவள் அவரை நோக்கி; உன்னை நான் விடமாட்டேன், ஆனால் ஜனங்கள் பள்ளிக்கு வருகிறநேரமாகிவிட்டபடியால் விட்டுவிட்டேன், நாளை இராவைக்கு வந்து எந்த விதத்திலும் உம்மை நான் புருஷனுக்கிக் கொள்வேனென்று சொல்லி, அவரை விட்டுவிட்டாள்.

பின்பவர் மிகவும் வியாகூலமுற்றவராகப் பள்ளிவாசலுக்குப் போய் விட்டார். இவளும் பின்தொடர்ந்து போனாள். பஹ்லூன் உலூ செய்துக்கொண்டு கபுருஸ்தானுக்குப் போய் ஒரு கபுரைத் தோண்டினார். அதை அவள் பார்த்து திரும்பிவந்து விட்டாள். மறுநாளிரவும் அவள் வழிபார்த்துக் கொண்டிருந்து பஹ்லூன் வெளியே புறப்பட்டு வந்தபொழுது அவரைப் பிடித்தாள். அப்போது பஹ்லூன் யாதொன்றும் பேசாமலிருப்பதைக் கண்டு சொல்லத் தொடங்கினாள்; என்னை நிகாஹ் செய்துக்கொள்ளாது போனாலும் போகட்டும், என்னுடன் ஒரு விடுத்தமாகிலும் சேருங்கள், நான் உம்மைவிட்டுப் போய் விடுகிறேன் என்றுச் சொல்லி அவரை மிகவும் கெஞ்சினாள். அவர் அதற்கு இணங்காமல் பெருமூச்சுவிடுகிறதும் அழுகிறதும் இரண்டு கைகளையும் வானத்தளவிலுயர்த்துகிறதுமாக இருந்து அவளைவிட்டு அகன்றுபோக முயன்றார். அவள் நல்ல ஜவானியாகவும் பலசாலியாகவும் இருக்கிறாள்.

இவரோ பகலெல்லாம் நோன்பும் இரவெல்லாம் நின்று வணங்குகிறவராகவும் ஷன்தீன் உடைய கஷ்ட நிர்வாகத்தினால் பலஹீனமுடையவராகவும் இருந்தபடியால் அவளைத் தட்டிக்கொண்டு போக முடியவில்லை. இப்படி சுபுஹு நேரம் வரையில் தொந்திரவுபண்ணி அவளால் ஏன்றமட்டும் பார்த்து "நான் என் மானத்தைவிட்டு உங்களை எப்படிக்கெஞ்சினாலும் என்பேரில் உங்களுக்கு இரக்கம் வரவில்லை. நல்லது நாளைமுதல் உம்மை நான் பங்கப்படுத்துவேன்" என்று சொல்லி மிகவும் கோபத்துடன் போய்விட்டாள். பின்னர் அவள் அமீருல் முஃமினீன் உமறு புனுல்கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஒரு நிருபம் எழுதினாள். அதன்வாசகமாவது; அமீருல் முஃமினீனே! தாங்களும், மதீனா நகரிலுள்ள அன்சாரீன்களும், மற்றும் மனிதர்கள் அடங்கலும் பலுலூன் என்கிறவரை மஹா பெரியமனிதர் என்று எண்ணிக்கொண் டிருக்கிறீர்கள். அவருடைய நடத்தைகளை விவரித்து ஆராய்ந்து பார்க்கவில்லை. அவராகிறவர் (கபன்) திருடுகிறவரிலுள்ளவர். இவர் இரவு காலத்தில் மனிதருடைய சஞ்சாரம் அடங்கியபின் வீட்டிலிருந்து புறப்பட்டு கபுருஸ்தானுக்குப்போய், புது கபுருகளைத் தோண்டி கபன்களைத் திருடி விற்று ஜீவனம்செய்கிறார். அதையறியாமல் மஹா பெரிய மனிதரென்று வைத்துக்கொண்டு இருக்கிறீர்களென்றும், இதுபோல் அநேகமாக அவர்பேரில் குற்றங்களைச் சாட்டி எழுதி, தாங்கள் இதுகளைத் தெளிந்து அறிந்தால் தெரியவருமென்றும் எழுதி அதைத் தன்னுடைய அடிமைகளில் ஒருவன் கையில் கொடுத்து ஒருவரும் அறியாமலிதை பள்ளிவாசல் மிம்பரின்பேரில் வைத்துவிடும்படி சொல்லி அனுப்பினாள்; அப்படியே அந்த அடிமை இஷாவுக்குப்பின்வந்து மிம்பரின்பேரில் வைத்து விட்டான்.

பின்பு அமீருல் முஃமினீன் உமறுபுனுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு சுபுஹு தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு வந்தபோது அவர்களுடைய பார்வை மிம்பரின்பேரில் விழவும் அவ்விடத்தில் ஒரு நிருபத்தைக் கண்டெடுத்து வாசித்துப் பார்த்தார்கள். அதில் பலுலூன் என்கிற ஸஹாபிபேரில் பலவிதமான படுதூறுகளை எழுதி இருப்பதைக் கண்டு கைசேதமுற்று அந்தச் செய்திகளை மனிதர்களுக்கிடையில் வெளியாக்காமல் மறைத்து வைத்தார்கள். மனிதர்கள் அதைக் குறித்துக்கேட்டதில் இந்த நிருபத்திலுள்ள சங்கதியின் உள்மருமத்தை அறிந்ததின்பின் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி விட்டார்கள். ஆயினும் பலு

லூனுடைய காரியத்தைப்பற்றி அன்று பகலெல்லாம் அமீறுல் முஃமினீன் அவர்கள் அவர் விஷயத்தில் இப்படி மிகவும் கவலைபாயிருந்து இரவாகி மனிதருடைய சஞ்சாரம் அடங்கியதின் பின்னால் பலுலூன் ஸஹாபியின் வீட்டிற்குப் போய் மறைவாக இருந்து அவர் புறப்படுவதை வழி பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

பின்பு அவர் சுமார் இரவு பனிரண்டுமணி வேளையில் வீட்டைவிட்டு வெளியாகிப் பள்ளிவாசலை நோக்கி நடந்தார். அமீறுல் முஃமினீன் அவர்களும் மறைவாக அவரைப் பின்தொடர்ந்து போனார்கள். அப்போது பலுலூன் ஒரு கபுறுக்கு அடுக்கப்போய் அதைத் தோண்டினார். அவ்வேளையில் அமீறுல் மூஃமினீன் அவர்களின் மனது கடிதத்தில் எழுதிய விஷயங்கள் சரி என்றதாக சாய்ந்தது. என்றாலும் மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு நபிசல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் திருவாக்கில் பலுலூனை (உலுல் அஸ்மு) என்னும் நபிமார்களுக்கு ஒப்பாக்கி பேசி இருக்கிறார்களே ஆகையால் அவரில் இப்படிப்பட்ட குறைச்சல் வருமா? என்று திபங்கிக்கொண்டிருக்கும்போது, பலுலூன் கபுரினிடமாக இருந்து ஒரு பெரிய இரும்புச் சங்கிலியை இழுத்து வெளியில்போட்டு, அதைக்கொண்டு தன்னுடைய திரேகத்தைப் பலமாக இழுத்து சுருக்கிக் கட்டி தன் தேகத்தை கடினமான வேதனையாக வேதனை செய்துகொண்டிருக்கிறார். அப்போது அவரின் (நபுஸானது) என்னை விட்டுவிடும் நான் உமக்கு மாறு செய்கிறதில்லை என்று சொல்லுகிறது. அப்போது பலுலூன் ஓ, நபுஸே! நீ எத்தனை எத்தனை சரீரங்களை வழிகெடுத்து நரகவாதியாக்கினாய்? உன் சொல்லை நான் ஒப்புக்கொள்கிறதில்லை. உன்னை நான் கஷ்டப்படுத்துகிறதை விட்டேனாகில் நீ ஒரு சாஅத்தில் வழி கெடுத்துப்போடுவாய் என்று சொல்லி அங்கு அடக்கஞ் செய்திருக்கும் கபுறாளிகளை நோக்கிச் சொல்லுகிறார்; உங்களின் நிலமைகள் எப்படியாயிற்று தெரியவில்லை நாளைக்கு என் நிலமை எப்படியாகுமோ என்று துக்கப்பட்டு சுபுஹு வரைக்கும் அழுது சரீரத்தைக் கஷ்டப்படுத்திக் கொண்டிருந்து பிறகு அந்த சங்கிலியைத் தோண்டின கபுரில் புதைத்துவிட்டுப் பள்ளிக்கு வந்துவிட்டார். அதை எல்லாம் அமீறுல் முஃமினீனாகிய உமறுப்னுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பார்த்து யாரோ இவரின்பேரில் கெடுதலான படுதூறு வார்த்தைகளை அநியாயமாக எழுதியிருக்கிறார்கள் என்று எண்ணி அந்தக் கடிதத்துடைய வாசகத்தை ஒருவருக்கும் சொல்லாமல் மறைத்தார்கள்.

இதற்கிடையில் ஹஜ்ஜுடைய காலம் வந்தது. அப்போது (ஷாம்) தேசத்திலிருந்து அமீர் அப்துற்றஹ்மானும் அவருடன் மூவாயிரம் பேரும் ஹஜ்ஜுசெய்ய மக்காவிற்குப் புறப்பட்டு மதீனாவில் வந்து தங்கினார்கள். அவ்விடத்தில் இரண்டுமூன்று நாளிருந்து அப்பால் மக்காவிற்குப்போக காபிலாக்கள் புறப்பட்டது. அமீர் அப்துற்றஹ்மான் என்பவர் அமீறுல் முஃமினீன் உமறிபுனுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹுவிடத்தில் பயணம் சொல்வதற்காக வந்தபோது பலுவான் நானும் இந்த வருடம் அமீர் அப்துற்றஹ்மானுடன் ஹஜ்ஜுக்குப்போய் வருகிறேன் எனக்கும் உத்திரவு கொடுங்களென்று அமீறுல் முஃமினீன் அவர்களிடம் கேட்டார். அப்போது அமீறுல் முஃமினீன் உமர்கத்தாபு அவர்கள் இவ்வருஷம் தாங்கள் போகவேண்டாம், மேல்வருஷம் நாமிருவரும் போகலாமென்று சொன்னார்கள். அதை மறுத்து இவ்வருஷமே நான்போக உத்திரவு கொடுங்களென்று பலுவான் சொன்னார். அமீறுல் முஃமினீன் உமறுபுனுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அமீர் அப்துற்றஹ்மானை அழைத்து பலுவானுடைய கையைப்பிடித்து அவரின் கையில் கொடுத்து சொன்னதாவது:—இவராகிறவர் நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய திருவாக்கால் புகழ்ப்பெற்றவர். நான் இவரை உம்மிடம் எப்படி ஒப்பிவிக்கிறேனோ அப்படியே நீர் என்னிடமிவரை ஒப்பிவிக்க வேணுமென்று சொல்லி பயணம் அனுப்பினார்கள்.

நிற்க பலுவான் றலியல்லாஹு அன்ஹு ஹஜ்ஜுக்குப் போகிறசெய்தி அமீரின்மகள் கேள்விப்பட்டு, பாதையில் பலுவானை கலைக்கிறதற்காக அநேக இலேசான காரியங்கள் இலக்கில் கிடைக்கும் என்று எண்ணி அவளும் ஹஜ்ஜுக்குப் போகிறேனென்று சொல்லி சிலர்களைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு ஒரு காபிலாவாகப் புறப்பட்டாள். அமீர் அப்துற்றஹ்மானும் அவருடைய காபிலாவும் மதீனத்தைவிட்டுச் சென்று ஒரு மன்ஸிலில் வந்து இறங்கினார்கள். அமீருடையமகளும் அவளுடைய கூட்டங்களும் மற்றொரு பக்கத்தில் இறங்கினார்கள். ஆகவே பலுவான் றலியல்லாஹு அன்ஹு இந்த இரண்டு கூட்டத்திற்கும் தலைதூரமாக ஓர் இடத்தில் இருந்து வணக்கம் புரிந்துக்கொண்டிருந்தார்கள்.

இரவானபோது அமீருடைய மகள் பலுவானிடம்போய் நான் ஹஜ்ஜுசெய்ய மக்கத்திற்கு வரவில்லை. நீர் மக்கத்திற்கு போகிற செய்தியைக் கேள்விப்பட்டு உம்மிடம் தனியே கலந்து பேசலா

மென்று எண்ணிப் புறப்பட்டேன். உமது பேரிலுள்ள ஆசை இன்னும் என்னைவிட்டு ஒழிந்து போகவில்லை. உம்முடன் தனித்துப் பேசுவதற்காக நாற்பது ஐம்பது ஜனத்துடன் பணங்களைச் சிலவு செய்துக்கொண்டு வந்தேன். இப்போது நீர் என்ன சொல்லுகிறீர்? ஒன்றிருக்கில் நீர் என்னை நிகாஹு செய்துக்கொள்ளுகிறது, அல்லது இந்த தனித்தவிடத்தில் என் ஹாஜத்தை நீர் நிறைவேற்றுகிறது, இந்த இரண்டில் ஒரு காரியமாவது செய்யாவிடில் உம்மை நான் இந்த இரண்டு கூட்டத்துக்கிடையில் அநேக பங்கப்படுத்துவேன் என்று வற்புறுத்தினாள். அதற்குப் பலுவான் யாதொன்றும் சொல்லவில்லை. மேலும் அவள் வெகு தொந்திரவு பண்ணிப் பார்த்தாள், அதற்கும் அவர் இடங் கொடுக்கவில்லை. அப்போது அமீருடைய மகள் கோபத்துடன் "உமக்கு நான் நல்லவிதமாக எவ்வளவு சொல்லியும் நீர் கேழ்க்கிறீரில்லை. நாளையதினம் உமதுபேரில் வருகிற (பலாய்) துன்பத்தை நீர் அறிவீ"ரென்று சொல்லிப் போய்விட்டாள். மறுநாள் இரண்டு காபிலாவும் புறப்பட்டு இரண்டாவது (மன்ஸிலில்) போய் இறங்கினார்கள்.

இரண்டாம் இரவில் பலுவான் றலியல்லாஹு அன்ஹு தனித்த இடத்தில் வணங்கிக்கொண்டு இருக்கும்போது அமீருடைய மகள் பலுவானிடம் வந்து, பலுவானே! நீர் எனக்கு வழிப்படுகிறீரா அல்லது உம்மைச் செய்யும் காரியம் செய்யவா? என்று மறுபடியும் கேட்டு அவர் பேரில் அதிக கிருபைகாட்டி அவளால் என்ற மட்டிலும் கலைத்துப் பார்த்தாள்.

அவர் இவளுடைய கலைப்பில் அகப்படவில்லை. அவள் ஆசை முறிந்தவளாகி, அவரைப்பார்த்து, நீர் பங்கப்பட்டபின்தான் எனக்கு வழிப்படுவீரென்று சொல்லி மிகவும் கோபத்துடன் தன் காபிலாவுக்குப் போய்ச்சேர்ந்து, தன்னுடைய அடிமைகளில் ஒருவனை அழைத்து ஐநூறு திருஹமுள்ள ஓர் (பணப்பையை) அவன் கையில் கொடுத்து இந்த மைதானில் இதோ ஒருவன் தொழுதுக்கொண்டிருக்கிறான், அவனுடைய (முசல்லா) விரிப்பின்கீழ் இந்தப்பையை வைத்துவிட்டு வாவென்று சொல்லி அனுப்பினாள். அந்த அடிமை அப்பையை அவள் சொன்னபடிக்கு வைத்துவிட்டு வந்தான். பின்பு தன்னுடைய கூட்டத்தில் அவள் சொன்னதாவது; நீங்களடங்கலும் கள்ளன் வந்தானென்று அபய சப்தமிடுங்கள், அப்போது அந்த காபிலாவிலிருந்து ஜனங்கள் ஓடிவருவார்கள், வந்துகேட்டால் நீங்கள் அவர்களிடத்தில் எங்கள் நாச்சியாருடைய கூடாரத்தில் ஒரு

கள்ளன் புகுந்து பணப்பெட்டியை உடைத்து பணப்பையை எடுத்துக்கொண்டு ஓடினான், நாங்கள் அவனைப் பிடிக்கத்தொடர்ந்தோம்! அவன் ஓடிப்போய் இந்த மைதானத்தில் முஸல்லா விரிப்பைவிரித்து தொழுதுக்கொண் டிருக்கிறனென்று சொல்லுங்கள் என்றாள். அந்தப்படிக்கு அவளுடைய காபிலாவிலுள்ளவர்கள் சப்தமிடவும் அந்த சப்தத்தைக் கேட்டு அமீர் அப்துற்றஹமானும் அவருடன் வந்திருப்பவர்களும் வந்து ஏன் இவ்விதம் சப்த மிடுகிறீர்கள் என்று அவளுடைய காபிலாவிலுள்ளவர்களிடம் கேட்டார்கள். அப்போது அக்கூட்டத்திலுள்ளவர்கள் எங்கள் நாச்சியாருடைய கூடாரத்தில் கள்ளன்வந்து புகுந்து பெட்டியை உடைத்து பணப்பையை எடுத்துக்கொண்டு ஓடினான், நாங்களவனை துரத்தினோம் அவன் ஓடிப்போய் இதோ முஸல்லாவிரித்து, தொழுதுக்கொண்டு இருக்கிறனென்று சொன்னார்கள்.

பிறகு அமீருடைய மகள் அமீர் அப்துற்றஹ்மானிடம் "இதுவென்ன அநீதமாக இருக்கிறது, நீங்கள் இந்த கள்ளனைப் பெரிய ஒலி என்று சொல்லுகிறீர்கள், அல்லாவுடைய அவுலியாக்கள் இப்படியும் செய்வதுண்டோ? நாங்கள் இவ்வளவுபேர்களும் கண்ணால் கண்டிருக்கிறோம், இந்த சாட்சிகளைக்கொண்டு அந்தக் கள்ளனை விசாரிக்க மார்க்கம் இடம் கொடுக்கவில்லையா?" வென்றாள். அப்போது அமீர் அப்துற்றஹ்மான்; வாருங்கள் கேட்போம் என்று சொல்லி எல்லோரையும் மைதானுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அவ்விடத்தில் பஹுலூன் தொழுதுக்கொண் டிருக்கிறார். அவர் சலாம்வாங்கினபின் கேட்கலாமென்று இருக்கும்போது அங்கு போன மனிதர்களில் ஒருவன் பஹுலூனுடைய விரிப்பின் கீழ் இருந்து, ஒருபையை எடுத்து அமீர் அப்துற்றஹ்மானுடைய கையில் கொடுத்தான், அதை அமீருடைய மகள் பார்த்து இந்தப் பைதான் திருடுபோனபை என்று சொன்னாள். அப்போது அமீர் அப்துற்றஹ்மான்; பஹுலூனே! இந்தப்பை உங்களுடைய விரிப்பின்கீழ் எப்படிவந்தது? என்று கேட்டார். அதற்குப் பஹுலூன் நான் அறியேன் என்று சொன்னார். அதைக்கேட்டு அமீரின்மகள், அமீர் அப்துற்றஹ்மானை நோக்கி; இவ்வளவு ஜனங்கள்பார்த்து இருக்க இந்த மனிதன் நான் அறியமாட்டேனென்று சொல்லுகிறதில் மார்க்கத்துடைய கட்டளைப்படி திருட்டின் ஹுக்மு அவன்பேரில் ஏற்படாதா? என்றுகேட்டாள்.

அமீர் அப்துற்றஹ்மான் சொன்னதாவது; அவரின்பேரில் கட்

டனேப்படி நடத்துவதற்கு என்னால்கூடாதகாரியம். தவிர நாம்ஹஜ்ஜு செய்து திரும்பி மதீனம்போய் அமீருல் மூஃமினீன் உமறு றலியல்லாஹு அன்ஹு இடம் சொல்லுவோம் என்று சொல்லி அவளுடைய கையில் பணப்பையைக் கொடுத்து அனுப்பிவிட்டார். பின்னர், மறுநாள் காபிலாக்கள் நடந்து மூன்றும் மன்ஸிலில்வந்து தங்கினார்கள். அவ்விடத்திலும் ஓர் தனித்தவிடத்தில் முன்போல் பலுலூன் றலியல்லாஹு அன்ஹு தங்கியிருந்து வணக்கம் செய்துகொண்டிருந்தார்கள். அன்றிரவு அமீரின்மகள் பலுலூன் இடத்தில் போய் மூவாயிரம்பேர்கள் முன்பாக நீர் கள்ளனென்று பேர் எடுத்துக்கொண்டீர், என்னை நீர் நிகாஹு செய்துகொண்டால், இந்த பங்கங்கள் உமக்கு வந்திராதல்லவா? இப்போதாவது என் பேச்சைக் கேட்கிறீரா அல்லவா? அப்படி கேளாவிடில் இன்னும் அநேக பங்கப்படுத்துவேன் என்று பலதரமும் சொல்லிக் காண்பித்தாள்,

பலுலூன் றலியல்லாஹு அன்ஹு யாதொருஜவாபும், சொல்லவில்லை. அப்போது அமீருடைய மகள் அதிக கோபத்துடன் தன் இருப்பிடத்திற்குவந்து, நித்திரையிலிருக்கும் தன் அடிமைகளில் ஒருவனை வெட்டி, மற்றொரு அடிமையை அழைத்து அந்தக் கத்தியை அவன்கையில் கொடுத்து, இந்தக் கத்தியிலிருக்கிற இரத்தத்தை நமது கூடாரத்திலிருந்து பலூலூன் இருக்கிற இடம்வரையில் பூமியில் வடியும்படிக்கு செய்துகொண்டுபோய், பலூலூனுடைய முஸல்லாவின் கீழ் இதை வைத்துவிட்டு சீக்கிரத்தில் வந்துவிடு என்றுசொன்னாள்; அப்படியே அந்தஅடிமை செய்தான். பின்பு எல்லோரும் கள்ளன் வந்தானென்று முன்போல்சப்தம்போடுங்கள், அப்போது அந்த காபிலாவிலிருந்து ஜனங்கள் வந்து என்னவென்று கேட்டால் நேற்றுவந்த கள்ளன் இன்றைக்கும்வந்தான், நாங்கள் அவனைப்பிடிக்கப்போனோம், எங்களிலொருவனை வெட்டிவிட்டு ஓடிப்போய் முஸல்லாவில் தொழுகிறான் என்று சொல்லும்படிக்குத் தன்னுடைய கூட்டங்களுக்கு திட்டப்படுத்தினாள்; அதுபோல் அவர்கள் சொன்னார்கள். அப்பால் அமீருடைய மகள் அமீர் அப்துற்றஹ்மானிடத்தில் "அமீரே! இதுவென்ன அநியாயமாயிருக்கிறது! நேற்றையதினம் என் பொருளைத் திருடிக்கொண்டு போனான், இன்றையதினம் என் அடிமைகளில் ஒருவனை வெட்டிவிட்டுப்போய் தொழுகையில் நிற்கிறான். இவன் இப்படி அநியாயம் செய்தும் தாங்கள் அவன்பேரில் ஏதுவும் செய்கிறீர்களில்லை, அந்தக் கள்ளன் ஓடும்போது கத்தியில் இருக்கிற ரத்தம் இதோ பூமியெல்

லாம் வடிந்து இருக்கிறதைப் பாருங்க'ளென்று காண்பித்தாள். அக்கிருந்து பலுலூன் இருக்கும் இடம் வரையில் இரத்தம் வடிந்திருப்பதையும், அடிமையை வெட்டின கத்தி பலுலூனுடைய முஸல்லாவின் கீழ் இருப்பதையும் மனிதர்கள் கண்டு திடுக்கமுற்றார்கள். அப்போது அமீருடைய மகள் பெரும் சப்தம் போட்டு, இந்த மனிதன் இப்படிப்பட்ட அநீதம் செய்கிறான், இதற்கு மார்க்கப்படி ஹுகும் செய்வதற்கில்லையா? நான் ஹஜ்ஜு செய்ய வந்தால் எனக்கு இவ்விதமான ஆபத்துகள், வருகிறதென்று கூக்குரலிட்டு போய்விட்டாள். அன்று விடிந்து காபிலாக்கள் புறப்பட்டு நடந்து நாலா மன்ஸிலில் வந்து தங்கினார்கள்.

அன்று ராத்திரியும் பலுலூன், தனித்து தொழுதுக்கொண்டிருக்கும்போது அமீருடைய மகள் அவரிடம்வந்து இன்னும் உனக்கு அதிக பங்கத்தை உண்டாக்கி வைக்கிறேனென்று சொல்லி தன்னுடைய (ஹபஷி) அடிமை ஒருவனை அழைத்து தன்னோடு சேர்க்கை செய்யச் சொன்னாள். அப்போது அவன் பயந்தான், நீ பயப்படாதே சேர்க்கை செய்தபின் பலுலூனை நிர்மாணமாக்கி என்னிடத்தில் விட்டுவிடு நான் அவரைப் பிடித்துக்கொண்ட புன்பு நீ நம்முடைய காபிலாவில் ஓடிப்போய் எங்கள் நாச்சியாரை கள்ளன் தூக்கிக்கொண்டு போய்விட்டான், என்று எல்லோரும் சப்தமிடுங்களென்றாள். அவள் சொன்னபடிக்கு அவ்வாறே அந்த அடிமை செய்துவிட்டுத் தன்கூட்டத்தில் போய், சப்தமிட்டான். அவள் கெட்டியாக பலுலூனைப் பிடித்துக்கொண்டு பெரும் சப்தமிட்டாள். அந்த சத்தங்களைக் கேட்டு அமீர் அப்துற்றஹ்மான் உடைய காபிலாவிலுள்ளவர்கள் இரண்டு இடத்திற்கும் ஓடிவந்து கேட்டதற்கு அவளுடைய காபிலாவிலுள்ளவர்கள் எங்கள் நாச்சியாரைக் கள்ளன் தூக்கிக்கொண்டு போய்விட்டா னென்றார்கள். எல்லோரும் பலுலூன் இருக்கிறவிடத்துக்கு ஓடிவந்து பார்க்கும்போது அமீரின் மகளும் பலுலூனும் கட்டிக்கொண் டிருக்கிறார்கள். அப்போது அமீரின் மகள் இந்த அநீதம் எங்கேயாவது உண்டா? இவன் என்னை இப்படி அநியாயம் செய்தான் என்று அழுதுகொண்டு சப்தமிட்டாள். அப்போது அமீர் அப்திற்றஹ்மான், அவளில் ஜிமாவுடைய அடையாளம் உண்டாவென்று பார்க்கும்படிக்கு சில பெண்டுகளிடம் சொன்னார், அவர்கள் பார்த்து அவளில் உண்டாயிருக்கிறதென்று சொன்னார்கள். பின்பு அவள் அமீர் அப்துற்றஹ்மானிடத்தில் வந்து இந்தக் கள்ளன் என்பொருளைத் திருடினான், என் அடிமை

களில் ஒருவனை வெட்டினான்;என்னையும் சிறை செய்தான்,நான் ஹஜ்ஜை நாடிவந்தேன், எனக்கு இந்த ஆபத்துகளெல்லாம்வந்து விதித்தது, எனக்கு இனிமேல் பயமாய் இருக்கிறது, உங்கள் உதவியும் எனக்கில்லை ஆனதால் நான் ஊருக்குத்திரும்பிப் போகிறேன். நீங்கள் ஹஜ்ஜு செய்து மதீனாவுக்கு வந்தபின் அமீருல் முஃமினீன் உமறுபுனுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு விடத்தில் இந்த செய்திகளெல்லாம் கண்ணால் கண்டதுபோலவே சொல்லவேண்டியது, நான் உங்களை அமீருல் முஃமினீன் அவர்களிடத்தில் சாக்ஷியாக்கி வைத்து பரியாது செய்வேன் என்று சொல்லிவிட்டு மதீனாவுக்குத் திரும்பிவந்து விட்டாள்.

பின்னர் அமீர் அப்துற்றஹ்மான் மக்காபோய் ஹஜ்ஜு செய்து திரும்பிவரும்போது பஹுலூன் கூடவாராமல் மக்கத்தில் தங்குவதாகச் சொன்னார். அப்போது அமீர் அப்துற்றஹ்மான் சொல்லுவார்;உங்களை அமீருல் முஃமினீன் அவர்கள் என்கையில் ஒப்படைத்து நீர் என்னிடத்தில் இவரை ஒப்புவிக்க வேணுமென்று சொன்னதை நீங்கள் மறந்துவிட்டீர்களா?இதுவும் தவிர, உங்கள்பேரில் அநேகம் பரியாதுகள் அமீருல் முஃமினீன் அவர்களிடத்தில் எட்டி இருக்கலாம். இதுகளுக்கெல்லாம் என்னை சாக்ஷியாகக்கோரப்பட்டிருக்கின்றது. இப்போது நான்உங்களை இவ்விடத்தில் விட்டுவிட்டுப்போகிறது சரியில்லை. ஆகையால் தாங்கள் யாதொருதடங்கல் சொல்லாமல் என் கூடவே வரவேணுமென்று சொல்லி பஹுலூனை அழைத்துக்கொண்டு மதீனாவிற்குப் புறப்பட்டார்கள். பின்பு அவர்களெல்லோரும் மதீனாவுக்குவர ஒருநாளைக்கு முன்பாகவே அமீருல் முஃமினீன் அவர்கள் ஊரைவிட்டு வெளியேறி பஹுலூன் வருகிறதை வழிபார்த்துக்கொண்டிருந்தார்கள். (காபிலா)வந்து இறங்கியபின் உமர்கத்தாபு றலியல்லாஹு அவர்களுக்கு சமாசாரம் தெரியவந்து- பின்பு அமீர் அப்துற்றஹ்மான் என்பவர் அமீருல்முஃமினீனை உமர்கத்தாபு றலியல்லாஹு அன்ஹு வினிடம் சந்திக்க வந்தபோது அவர்கள் அவரிடம் பஹுலூனுடைய செய்திஎன்ன? அவரைப்பற்றி ஓர் பெண்ணானவள் என்னிடம் களவைக்கொண்டும் பழியைக்கொண்டும், வினாவைக்கொண்டும் பரியாதுசெய்து, உம்மை அவைகளில் சாட்சியாக்கி வைத்திருக்கிறாளே அது என்னவென்று அமீருல் முஃமினீன் அவரிடம் கேட்டார்கள். அப்போது அவர் அந்த மூன்று காரியங்களையும், நானும் என்னுடனிருந்தவர்களும் கண்ணாலே கண்டோம், அதில் யாதொரு சந்தேகமில்லை என்று சொன்னார்.

அதுகேட்டு அமீருல் முஃமினீனவர்கள் "அந்த செய்திகளென்னை மிகவும் ஆச்சரியமடையச் செய்கின்றன. ஏனெனில்; நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களின் சொல் பழுதாகிப்போவதை நான் இதுவரையில் கண்டதில்லை, நீரும் உம்முடைய கூட்டங்களும் நபியுடைய சொல் பழுதாகும் விதமாக இப்போது சாட்சி சொல்லுகிறீர்கள், நான் நம்புவதற்கில்லை, ஆனால் நான் மார்க்கவிதிப்படி ஹுக்கும செய்கிறவனுயிருக்கிறேன்" என்று சொல்லி, அங்கிருந்து மறுநாள் எல்லோரும் மதினம்வந்து சேர்ந்தார்கள். காபிலா வந்தச்செய்தியை அமீருடையமகள் அறிந்தது, அமீருல் முக்மினீன் உமறு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு இடம் வந்து எனது பரியாதுக்கு வகைச் சொல்லுங்களென்று கெட்டு நின்றாள். அப்போது அவர்கள் பலுவான் சஹாபியை அழைத்து 'உங்கள்பேரில் அமீருடைய மகள் பரியாது செய்திருக்கிறாள். அதற்கு சாட்சி (ஷாம்) தேசத்தின் அமீர் அப்துற்றஹ்மானும் அவருடைய கூட்டங்களும் சொல்கிறார்கள்' என்றபோது; அதற்கு பலுவான் என்பவர் அமீருல் முஃமினீனே! என்பேரில் தங்களிடம் மார்க்க விதிப்படிக்கு சாட்ச்சிகள் இருந்தால் அகத்தியம் என்பேரில், மார்க்க கட்டளை நடத்துங்கள் என்று சொன்னர். அப்போது அவர்கள் அமீர் அப்துற்றஹ்மானை அழைத்து களவு, கொலை, ஸினு! இம்மூன்று காரியங்களையும் நீங்கள் கண்டதுபோலே சொல்லுங்களென்று கேட்டார்கள். அமீர் அப்துற்றஹ்மான் "நாங்கள் காபிலாவில் நித்திரையில் இருக்கும்போது அமீரின் மகள் உடைய காபிலாவில் நின்றும் சப்தம் கிளம்பினதைக் கேட்டு எல்லோரும் ஓடிப்போய், என்ன சப்தமென்று விசாரிக்கும் போது, பலுவான், அமீர்மகளுடைய கூடாரத்தில் புகுந்து பெட்டியை உடைத்து ஐநூறு திருஹமுடைய (பணப்பையை) எடுத்துக் கொண்டு போனுரென்று சொல்லினர்கள். நாங்களும் அவர்களை பின்தொடர்ந்துபோனேம், பலுவான் தொழுதுக்கொண் டிருக்கிறர். அவருடைய முஸல்லாவின் கீழ் அந்தப் (பணப்பையை) வைத்திருக்க நான் கண்டு அதை எடுத்துக்கொண்டேன். மறுநாள் இரவும் முன்போல் சப்தம்கேட்டது. எல்லோரும் அங்கே ஓடினேம், அமீர் மகளுடைய காபிலாவில் ஒருத்தன் வெட்டப்பட்டிருக்கிறன். அதென்னவென்று கேட்டோம், அவர்கள் நேற்றையதினம்வந்த கள்ளன் இன்றிரவும் வந்தான், நாங்கள் அவனைப் பிடிக்கப்போனதில் ஒருவனை வெட்டிப்போட்டு ஓடிப்போனு னென்றூர்கள். அதைப் பார்த்ததில் வெட்டுப்பட்ட விடத்திலிருந்து பலுவான் இருக்கிற

இடம்வரைக்கும் இரத்தத் துளிகள் விழுந்து இருக்கிறதுமன்றி கத்தியை அவரின் முஸல்லா விரிப்பின்கீழே கண்டோம். மூன்றுமிரவும் அவ்விதமாகவே சப்தம்கேட்டுப் போனதில் இரண்டு பிரிவான சப்தம் கேட்டது. அதில் ஒன்று காபிலாவிலும் மற்றொன்று மைதானில் ஒரு பெண்பிள்ளை உடைய சப்தமாகவும் கேட்டது. சிலர் மைதானுக்கும் சிலர் காபிலாவிற்கும் ஓடிப்போய் பார்க்க; காபிலாவிலுள்ளவர்கள் பழைய கள்ளன் வந்து எங்கள் நாச்சியாரை தூக்கிக்கொண்டு ஓடிப்போனான் என்றார்கள். அதைக் கேட்டு எல்லோரும் மைதானுக்கு வந்து பார்க்கையில், அமீருடைய மகளும் பலுவானும் சேர்ந்தவர்களாக இருக்கக்கண்டு கிட்டே போனோம். அவள் அவரை விடவும் பலுவான் அப்புறம் போய்விட்டார். நான் பெண்டுகளை விட்டு இவளில் சேர்க்கையுடைய குறி இருக்கிறதா என்று பார்க்கச் சொன்னேன், பார்த்தவர்கள் உண்டென்று உண்மையாக்கி வைத்தார்கள்" என்றார். அமீருடைய மகளின் காபிலாவிலுள்ளவர்களும் இந்த மூன்று காரியங்களையும் கண்ணாரக் கண்டிருக்கிறார்கள். அவைகளைக்கேட்டு அமீருல் முஃமினீன் உமறு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மிகவும் தட்டழிந்து ஹைறானாகி பின்னும் மார்க்கத்துடைய கட்டளை இவ்வாறு இருக்கிறதே என்ன செய்கிறது என்று யோசித்துக் கடைசியாக பலுவானை அமல் நடத்தாட்டும் இடத்தில் கொண்டுபோகச் சொல்லி அவ்விடத்திற்குப் போனார்கள்.

பின்னர் பலுவானை நிறுத்தி கசையால் அடிக்கும்படி உத்திரவு செய்தார்கள். அப்போது பலுவான் அமீருல் முஃமினீனே! நீங்கள் எனக்காக ஒருமணி நேரம் தாமதியுங்கள், என்று சொல்லி (யா அலி யா அலி) என்று சப்தமிட்டார். ஒரு மணி நேரத்துக்குள் ஒரு மனிதன் ஓடிவந்து (அலி றலியல்லாஹு இதோ வருகிறார்களென்று சொன்னார், இதற்கிடையில் அங்கு(அலி இபுனு அபீதாலிபு, றலியல்லாஹு அன்ஹு வந்து அமீருல் முஃமினீன் இடம் இதென்ன விஷயம் எனக்கேட்டார்கள். அப்போது அமீருல் முஃமினீன் உமறு கத்தாபு சொன்னதாவது; பலுவான்பேரில் களவும் பழியும் ஸினாவும் ஏற்பட்டிருக்கிறது. அவர்பேரில் நான் மார்க்கவிதிப்படி கட்டளைசெய்ய ஆரம்பிக்கிறேனென்றார்கள். அப்போது அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அமீருல் முஃமினீனே! பலுவானுடைய காரியத்தில் நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் சொன்னதை மறந்து விட்டீர்களாவெனக் கேட்க; நானொருபோதும்

மறக்கவில்லை. ஆயினும், மார்க்ககட்டளை இப்படிச்செய்ய இடந் தருகிறதென்று உமறுகத்தபு றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள். அதற்கு அலி றலியல்லாஹு அன்ஹு இந்தக் காரியத்தை என்வசமாக்குங்கள், அதை நான் நல்லவிதம் விசாரித்து மார்க்க விதிப்படி தீர்ப்புச் செய்கிறேனென்றார்கள். அதற்கவர்கள் ஆம் அப்படியே செய்யுங்களென்று சொல்லவும், அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அங்கிருந்த மனிதர்களை நோக்கி நான் பேசுகிறது எல்லோருக்கும் கேழ்க்கும்படியான ஓர் இடத்தைத் தயார் செய்யுங்கள்; என்று சொன்னார்கள். அப்படியே உயரமான ஓர் இடம் தயார் செய்யப்பட்டது, அப்பால் அந்தத் தலத்தில் அலி றலியல்லாஹு அன்ஹு வந்து உட்கார்ந்துக்கொண்டு ஷாமுடைய அமீர் அப்துற்றஹ்மானை அழைத்து பஹுலூனுடைய காரியத்தை நீங்கள் கண்டதை உள்ளாஉள்ளபடி சொல்லி வாருங்களென்றார்கள். அப்போது அவர் அமீருல் முஃமினீன் உமர் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் சொன்னதுபோல் குறைவில்லாமல் சொல்லி முடித்தார். நீங்கள் கண்ட இந்த மூன்று காரியங்களிலும் மனிதர்கள் ஒருவர்பேரில் இவ்விதமாக படுதூறான வார்த்தையை அநீதமாய் ஏற்படுத்துகிறதற்கு இடம்பாடாகுமா அல்லவா? வென்று அலி றலியல்லாஹு அன்ஹு கேழ்க்கவும், அமீர் அப்துற்றஹ்மான்; இடம்பாடாகு மென்றார். அந்நோத்தில் அலி றலியல்லாஹு அன்ஹு அமீருடைய மகளை அழைத்து அமீர் அப்துற்றஹ்மானும் அவருடைய கூட்டத்தார்களும் சொன்னார்களே அதில் நீ என்ன சொல்லுகிறாய் என்று கேழ்க்கவும், அவர்களடங்கலும் கண்ணாலே கண்டதல்லாமல் பிறர் சொல்லக் கேட்டதல்லை. அடங்கலும் உண்மையானதாக இருக்கும்; நான் பஹுலூனுக்கு கர்ப்பமாகி இருக்கிறேனென்றாள். அப்போது அலி றலியல்லாஹு அன்ஹு அவள் வயிற்றிலிருக்கும் சிஸுவை சப்தமிட்டு கூப்பிட்டார்கள். உடனே அமீரின் மகளுடைய வயிற்றிலிருந்து (லப்பைக்) என்று மூன்று சப்தமுண்டாயிற்று, அவர்கள் அதைக் கேட்டதும் உன் தகப்பன் யாரென்றார்கள். அதற்கு அந்த சிஸு என் தகப்பன் இன்ன (ஹபஷி) அடிமை என்று சொல்லிற்று. அப்போது அவர்கள் அந்த அடிமையை அழைத்து உன்னுடைய நாச்சியார் உடைய செய்தியை ஆதிமுதல் அந்தம் வரைக்கும் நடந்தபடி உண்மையாக இந்த சபையிலுள்ளவர்கள் கேழ்க்கும்படி நன்றாக சொல், இல்லாவிடில் நான் உன்னை வெட்டிப்போடுவே னென்றார்கள். அப்போது அடிமை;

பெண்பேசினது தொடுத்து ஸினாவரையிலும் நடந்துள்ள மாறுபாடு அடங்கலையும் சொல்லிக் காண்பிவித்தான். அதைக்கேட்டு அங்கிருந்தவர்களடங்கலும் புதுமையானார்கள். அப்போது அலி றலியல்லாஹு அன்ஹு அமீர் அப்துற்றஹ்மானைப் பார்த்து, நீர் அமீர் மகளும் பஹ்லூனும் கட்டிக்கொண்டிருந்தார்களே, அந்நேரத்தில் பார்த்தீரா வென்று கேட்க, அவர் இல்லையென்று சொன்னார். அப்படியானால் இப்போது உம்முடைய சாக்ஷி எப்படி எனக்கேட்க, எங்களுடைய சாக்ஷி தவறுதலாகி விட்டதென்றார். அப்போது அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் உமர் றலியல்லாஹு அன்ஹுவை நோக்கி, ஓ! அமீருல் மூஃமினீனே! இப்போதுநீங்கள் ஹபஷி (அடிமைக்கு)ஸினாவுடைய ஹுக்மை நடத்தாட்டுங்கள். அமீர் மகள் பிள்ளை பெற்றபின் அவள்பேரிலும் அவ்வாறே செய்யுங்களென்று சொல்லி முடித்து சலாம் சொல்லிக்கொண்டு வெளி வந்தார்கள்.

அந்தச் சபையில் இருந்தவர்கள் அலி றலியல்லாஹு அன்ஹுவின் அடிமையாகிய கம்பரை நோக்கி இந்த செய்தி உங்களுக்கு எப்படித்தெரிந்ததென்று கேட்டார்கள். அப்போது அவர் எங்களுடைய நாயகம் அவர்கள் (கூபா) பள்ளிவாயலில் குர்ஆன் ஓதிக்கொண்டிருந்தார்கள், அப்படி இருக்கும்போது திடுகூறாக (லப்பைக்) என்று மூன்றுதரம் சொன்னார்கள். நாங்களெல்லோரும் அதைப்பற்றி புதுமையாக கேட்டபோது, அவர்கள் என்னை அழைத்து குர்ஆனை என்கையில் கொடுத்துச்சொன்னதாவது; நான் விரைவாக மதீனத்திற்குப் போகவேண்டும், நீர் வருகிறதானால் குர்ஆனை வைத்துவிட்டு என் இடுப்பைப் பிடித்துக்கொள்ளுமென்றார்கள். நான் குர்ஆனை வைத்துவிட்டு அவர்களுடைய இடுப்பைப் பிடித்துக் கொண்டேன், அவர்கள் சில அடிவைத்து நடந்தார்கள், நான் அதை எண்ணினேன், இருபது அடியானபின் நான் மதீனாவுடைய ஒட்டகை லாயம் சார்பானவைக் கண்டேன் என்றார். இதைக்கேட்டு எல்லோரும் புதுமையானார்கள். நசீஹத்து, (உணர்ச்சிவருத்தல்,) ஆப் எனது சகோதரர்களே! இந்த பஹ்லூன் சஹாபி என்பவர் அல்லாவுக்குப் பயந்து ஷை பெண்ணின் மாய்வலையில் அகப்படாமல் தாம் ஸினாவின் பாவத்தைவிட்டும் எப்படி தப்பித்துக் கொண்டாரென்பதை உங்கள் மனதில் கவனித்து நோட்டமிடுங்கள்.

ஆகவே, அல்லாஹுத்தஆலா (குர்ஆன் ஷரீபில்) ஸினாவுடைய கெடுதலையைப்பற்றி (15) பதினைந்தாவது ஜுஸுவில், (பனீ இஸ்ராயீல்) சூறத்தில், (3)வது ருகூவில் திருவுளமாகிறான். (வலாதகுரபுஸ்

ஸினு, இன்னஹூ, கான, பாஹிஷதன், வசாஅ, ஸபீலா) ஆனீ நீங்கள் ஸினுவுக்கு முடுகவேண்டாம், திடனுக அது மெத்த கெட்ட செயலும் பாதைபோல் தீக்கானதுமாயிருக்கும். ஏனெனில்; ஸினுவாகிறது, அது வுடையானை நரகத்தில் இழுத்துவிடு மென்பதாம். தவிர ஸினுவில் (6) கெட்ட கருமங்கள் உண்டாயிருக்கின்றன. அதில் மூன்று கருமங்கள் துனியாவில் உண்டாகும். 1-வது, ஸினுச்செய்தவனின் முகத்தின் லட்சணம் மாறிவிடும். 2-வது, அவனை மிடிமை தொடும் 3-வது அவன் வாழ்நாள் குறையும். இனி ஆகிரத்தில் மூன்று கருமங்கள் உண்டாகும். அவற்றில் 1-வது அல்லாஹுத்த ஆலாவின் கடினகோபம், 2-வது கேள்விகணக்கின் கொடூரம், 3-வது நரகம் புகுதகிறது. என்று நபிகள் நாயகம் சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவள மானுர்கள். (ரிவாயத்து) இன்னும் ஹதீது ஷரீபில் நாயகம் றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவளமானுர்கள். யாதெனில்; நான் (மிஅறுஜு)வுடைய இரவையில் இரண்டுபேரைக் கண்டேன், அவர்கள் என்னைத்துப்பரவான ஓர் பூமியளவில் கூட்டிக்கொண்டு போனுர்கள், என்றுசொல்லி அநேக செய்திகளையும் சொல்லி சொன்னதாவது; அவ்விருவர்கள் என்னை ஓர் அடுப்புபோல் உள்ள பொடையளவில் கூட்டிக்கொண்டுபோய்க் காட்டினுர்கள். அதைப் பார்த்தால் அந்த பொடையின்வாய், சிறிபதாகவும், அடி அகலமாகவுமிருந்தது. அதன் கீழே நெருப்பு மூட்டப்பட்டு இருக்கிறது, அதில் சில ஜனங்கள் கிடந்தார்கள், அந்த நெருப்பு அக்கினியால் உயர்ந்ததானுல் அவர்கள் மேலே வருகிறுர்கள், நெருப்பு அமர்ந்ததானுல் கீழே தாழ்கிறுர்கள். தவிர அதில் நிர்மாணத்துடன் சில ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் காணப்பட்டார்கள், அப்போது நான் அந்த இரண்டுபேரிடத்திலும் இவர்கள் இந்தப் புடையில் கிடப்பதின் காரணம் ஏதாயிருக்குமென்று கேட்டேன், அதற்கவர்கள், இவர்கள்தான் துன்யாவில் ஸினுசெய்த ஆண்பெண்களாக யிருக்குமென்று சொன்னுர்கள். இன்னும் ஹதீது ஷரீபில் வந்திருக்கிறதாவது, ஒருவன் ஸினுசெய்தானுகில் ஈமான் அவனை விட்டும் நீங்கி நிற்குமென்றும், பின்பு அவன் அச்செயலைவிட்டும் மீண்டாயானுகில், மறுபடியும் அது அவனளவில் மீண்டுவிடுமென்றும் நபிநாயகம் சல்லல்லாஹு அலைஹிவ்சல்லம் திருவளமானுர்கள். (ரிவாயத்து) ஹாகிம் பேசிவந்தார்கள், என்னவெனில் ; ஒருவன் ஸினுசெய்தானுகில் அல்லது கள் குடித்தானுகில் தன் சரீரத்திலிருக்கிற சட்டையை கழட்டுகிறதுபோல், ஈமான் அவனை விட்டும் நீங்கி

அப்புறப்பட்டு விடுமென்று (றிவாயத்து) இன்னும் நபிநாயகம் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவளமானார்கள். பாவமான கருமங்களைச்செய்வது குபுருக்கு தூதாக இருக்கும், அதின் கருத்தாவது அப்பாவங்கள் அவனை குபிரில் தள்ளிவிடுமென்பதாம். ஆனபோதே ஒருவன் மடத்தனத்தால் பெரும் பாவங்களைச் செய்து விட்டானாகில், அவன் தான்செய்த பாவத்தின்பேரில் அழுது சலித்து தௌபாவின் ஷரத்துபடி உண்மையாக மனதினால் தௌபாச்செய்வானாகில், அல்லாஹுத்தஆலா அவனுடைய தௌபாவை கபூல் செய்வான். ஏனெனில்; அவனாகிறவன் (அர்ஹமுர் ருஹிமீன்) கிருபை செய்கிறவர்களில் மெத்த கிருபையாளனும், பாவங்களை மன்னிக்கிறவனாகவு மிருக்கிறான். இதுபோலவன் (ஷதீதுல் இகாபு) அவன் தனக்கு மாறுசெய்கிறவர்களை கடுமையாக வேதனை செய்கிறவனாக இருக்கிறான். ஆதலால் ஒவ்வொருவர்களும் சிறுபாவம் பெரும் பாவங்கள் யாவற்றையும்விட்டு நீங்கி தௌபாவைப் பற்றிப் பிடிப்பது கடமையாக இருக்கின்றது. ஆகவே தௌபாவின் ஷர்துகளை இந்தகிதாபின் கடைசியில் எழுதியிருக்கிறதுபார்த்து நடந்துகொள்ளல் வேண்டும். அல்லா நம்மனைவர்களையும் பாவத்தை விட்டும் காப்பாற்றிக் கொள்வானாக. ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

(முற்றிற்று)

அபூஷஹமா கிஸ்ஸா.

இது ஹலாத்து அமீருல் முஃமினீன் உமறுபுனுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மகன் அபூஷஹமாவுடைய கிஸ்ஸாவாக இருக்கும்.

(பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்)

அல்ஹம்து, லில்லாஹி, றப்பில், ஆலமீன், வல்‘ ஆகிபது,லில், முத்தகீன், வஸ்ஸலாது, வஸ்ஸலாமு, அலாறசூலிஹி, ஸையிதினா, முஹம்மதின், வஆலிஹீ, வஅஸ்ஹாபிஹீ, அஜ்மஈன், (அம்மாபஅது), ஹாபிலுல், இஸ்லாம், என்ற கிதாபில் நகல் செய்யப்பட் டிருக்கிறதாவது:—ஹலாது உமறுபுனுல் கத்தாபு றலியல்லாஹு அன்

ஹு அவர்கள் நாயகம் றசூல்சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுக்கு இரண்டாவது கலீபாவாக வந்து மார்க்கநீதி நெறி வரம்புகளைத் தவிரவிடாமல் நீதம் செலுத்தி அரசாங்கம் நடத்தி வந்தார்கள். அவர்களுக்கு அபூஷஹமா வென்று பேர்விளங்கிய ஒரு மகனிருந்தார். அன்னவர் முகம் அழகானவராகவும் சப்தம் அழகானவராகவும் நல்நடக்கை யுடையவராகவும் குர்ஆன் ஷரீபை அழகான இராகம்கொண்டு ஓதுகிறவராகவு மிருந்தார். ஆகவே சஹாபாக்களுக்கு குர்ஆன் ஓதக்கேட்க ஆசையானர்களாகில் அபூஷஹமாவை அழைத்து ஓதச்சொல்லி கேழ்க்கிறவர்களாக இருந்தார்கள். அப்படி இருக்குங்காலத்தில், ஒருநாள் அபூஷஹமா சுகக்குறைவாகி விட்டார். அவ்வாறு ஆகிவிடவும், உமறுபுனுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அபூஷஹமா சுகமடைவதற்காக நாயனிடம் மிக்க துஆ விரந்து நாயனே! எனது பிள்ளை அபூஷஹமா இந்த நோவைவிட்டும் சவுக்கியம் அடைந்தாராகில் நான் ஒரு மாசம் நோன்பு என்னும் (உபவாசம்) வைப்பேனென்று நேமிதம் நேர்ந்துக் கொண்டார்கள். அப்படியே அல்லாஹுத்தஆலா அவர்கள் துஆவை கபூல் செய்தான். அப்போதே அபூஷஹமா வியாதி நீங்கி சுகமடைந்தார். பின்பு அவர் ஒருநாள் நாயகம் றசூல்சல்லல்லாஹு அலைஹிவ்சல்லமவர்கள் (ரௌலா முபாறக்காவில்) போய் குர்ஆன் ஷரீபை ஓத எண்ணம் கொண்டவரானர். இந்தச்செய்தி மதீனாவின் ஜனங்களுக்குத் தெரியவந்தது. அவரின் (கிறுஅத்து) என்னும் ஓதலைக் கேட்பதற்காக மிகுந்த ஜனங்கள் நாயகம் றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் (றவுலாஷரீபில்) வந்து கூடி விட்டார்கள். (ரூவி) சொல்லுகிறதாவது யாதெனில்;

அபூஷஹமா குர்ஆன் ஷரீபை ஓத ஆரம்பித்தவுடன், அங்கு கூடியிருந்த ஜனங்கள் ஒவ்வொருவர்களும் அவரின் (கிறுஅத்து) ராகத்தின் இனிமையைக் கேட்டு சொன்னதாவது; உமறுடைய மகனுக்கே சுப்சோபன மென்ற நன்மொழிகூறி அவரை மிகவும் துதித்து மெச்சி வாழ்த்தி கிறுஅத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பிறகு அபூஷஹமா குர்ஆன் ஷரீபு ஓதி பருக்கொளிந்ததும், அவர் சஹாபாக்களிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு தமது வீட்டிற்குப் போனர். போய்க்கொண்டிருக்கையில், இடைவழி பாதையினிடமாக, ஓர் (எஹூதிகாபிர்) அவரைச் சந்தித்தான். அவனோ வைத்ய சாஸ்திரத்தில் மிக்க பயிற்சியைப் பெற்றவனாக இருந்தான். அவன் அபூஷஹமாவைப் பார்த்ததும் சொன்னதாவது; நீர் வியாதியாக

இருந்து இப்போது கொஞ்சம் சவுக்கியம் பெற்றிருக்கிறீர். ஆயினும் உமது சிரம் மஞ்சளித்து இருக்கிறதுமன்றி வியாதிகுறி கொஞ்சம் இருந்தே வருகிறது. இதற்குள் நீர் இன்று நாயகம் றசூல்சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களின் ரௌலாஷரீபில் சென்று குர்ஆன் ஷரீபை ஓதிவிட்டு வருகிறதாகப் பார்க்கிறேன், இவ்வாறு நீர் மென்மேலும் கஷ்டத்தை எடுத்துக்கொண்டீராகில் மறுபடியும் வியாதியில் ஆகிவிடுவீர், ஆனதுபற்றி நான் உமக்கு இருக்கிற வியாதி நீங்குமாறு சில செய்திகள் சொல்ல விரும்புகிறேன், அதை நீர் கேட்டு நடந்தால் அது உமக்கு பிரயோஜனமாகுமென்று சொன்னான்; அவர் அதென்ன சொல்லுமென்று கேட்டார்.

அதற்கு அந்த (எஹூதி) அபூஷஹமாவே! நீர் எனது வீட்டு வாயலுக்குவாரும், நான் இன்றிரவு ஓர் மருந்து தயார்செய்து இருக்கிறேன், அதற்கு (ஷருபு) என்று பேர், அதன் குண தண்ணம் உடம்பில் இருக்கும் வியாதியைநீக்கி நற்சுகத்தையும் இரத்த புஷ்டியையுமுண்டுபண்ணி அதிக சுகத்தைக்கொடுக்கும். ஆனால் அதை நீர் கொஞ்சம் சாப்பிட்டுப்பார்த்தால் அதன் பலாபலன் உமக்கு நன்கு விளங்கும், இதுவே பரிட்சிக்கப்பட்ட ஓர் மருந்தாகவு மிருக்குமென்று சொன்னான். இந்த வார்த்தையை அபூஷஹமாகேட்டதும் (நஊதுபில்லாஹி மின்ஹா) எஃனி. நான் அல்லாவுத்தஆலாவைக் கொண்டு இந்த செய்கையைவிட்டும் காவல் தேடுகிறேன் என்றுச் சொல்லி அவனுக்குச் சொன்னதாவது; நான் றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களின் கலீபாவின் மகனாயிருக்கிறேன். ஆப் மனிதனே! இப்படிப்பட்ட வார்த்தையை நீ இனி எனக்குச் சொல்லாதே. மேலும் நான் இந்தச்செய்தியை என் தகப்பனாருக்குச் சொன்னேனாகில் நீ உயிர்தப்புவது கஷ்டமாகிவிடுமென்றார்.

அப்போது எஹூதி அவருக்கு சமாதானம் கூறிப் பின்னும் அவன் சொன்னதாவது; நான் உமது தேகசவுக்கியத்தைக் குறித்து ஔஷத மருந்தை தருவதாகச் சொன்னேன். ஏனெனில்; இப்படிப்பட்ட மருந்து தேடப்போனால் கிடைப்பது மிக்க அரிது. நான் உமதின் இஷ்டத்தை அனுசரித்து உமக்கு அம்மருந்தைக் கொடுக்கப் பிரியப்பட்டேன். ஆனால் இதில் ஏதேனும் மஸ்து உண்டாகுமென்ற அபிப்பிராயமிருந்தால் அதில் வேறொரு வஸ்துவைபோட்டு கலந்துவிடுகிறேன், அப்போது மஸ்து உண்டாகமாட்டாது, என்று சொல்லி அவரின் புத்தியை மயக்கி ஏமாற்றிவிட்டான். அப்போது அபூஷஹமா (ஷைதான்) மிரட்டுதலால் அவன்சொல்லை நம்பி எஹூ

தியுடன் அவன் வீட்டிற்குச் சென்றார். அப்பால் ஏஹூத் சாறுயத்தைக் குடிப்பாட்டினான், அவர் அதைக்குடித்ததும் மயங்கி கீழே விழுந்தார், விழவும் அவன் அவரைத் தன்வீட்டைவிட்டும் வெளியே அப்புறப்படுத்திவிட்டான். பின்பு அவர் வெளியினின்வந்து தன் வீட்டைநோக்கி போய்க்கொண்டிருக்கையில் ஷைத்தான் மனிதனின் ரூபமெடுத்துவந்து அவரை வழிகெடுக்க எண்ணம்கொண்டு சொன்னதாவது; ஓ! அபூஷஹமாவே! நீர் இப்படி மயக்கம்பிடித்து மயங்கித் திரிகையில் வீட்டுக்குசெல்வது எங்ஙனம்? ஆனதால் மைதானத்துக்குப்போய் இருந்து மயக்கம் தெளிந்தபின் வீட்டுக்குச்செல்வது மிகவும் நன்று எனச்சொல்லி அவரைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு அங்கிருந்த அழகிய பூங்காவனத் தோட்டமாகிய (பனின் நஜ்ஜார்) கிளையாரின் தோட்டத்திற்குள் கொண்டுவந்து சேர்த்தான். அப்போது அங்கு அழகு சவுந்தரியமுள்ள ஓர் பெண்ணானவள் நித்திரையிலிருந்தாள். ஆகவே அபூஷஹமா மயக்கத்தினால் யாதொன்றும் தெரியாமல் அப்பெண்பிள்ளையின் பாகமாய்ப்போய் அவளைத் தொட்டார். அவள் நித்திரையிலிருந்து விழித்து அவரின் அழகு ரூபத்தைக் கண்ணுற்று அவள் சும்மா இருந்துவிட்டாள்.

பின்பு அபூஷஹமா ஷைத்தானின் மிரட்டுதலால் அவளில் நின்றும் கெட்ட செய்கையைச் செய்யத்துணிந்தார். இவ்விஷயத்தை ஷைத்தான் பார்த்துச் சந்தோஷமானான். பின்பு அபூஷஹமா மயக்கம் தெளிந்து தான்செய்த குற்றத்தின்பேரில் மிக்க கைசேதமுற்று, நாயனே! நான் ஷைத்தானின் மிரட்டுதலால் அறியாமல்செய்த பாவத்தை உன்னிடத்தில் பிழைபொறுக்கத் தேடுகிறேன், நீ பாவங்களை மன்னிக்கிறவனாயிருக்கிறாய், ஆனதால் எனது இந்தப்பாவத்தையும் மன்னித்து கிருபைசெய்தருள் என்று சொல்லி; அவர் அந்த பெண்பிள்ளையிடம் கேட்டுக் கொண்டதாவது;: ஆய்! பெண்ணே! நான் ஷைத்தானின் காரணத்தால் இந்தகெட்ட செய்கையை செய்துவிட்டேன். ஆயினும் நீ இந்த சமாசாரத்தை யாருக்கும் வெளிப்படுத்தாமல் இருக்கும்படியாக நான் உன்னிடம் கேழ்க்கிறேன். என்று அவளுக்கு போதுமான சமாதானத்தைக் கூறிவிட்டு தன் வீட்டிற்குவந்தார். வந்து அந்த இராவுமுழுவதிலும் அழுதுசலித்து அல்லாவுத்தஆலாவினிடம் பிழைபொறுக்க தேடியவராகவே இருந்தார். இதிநிற்க; அவரில்நின்றும் அந்தப் பெண்பிள்ளைக்கு ஹமல் (கற்பம்) தரித்துவிட்டது. பின்பு அவளுக்கு பேறுகாலம் அடுத்ததும் அவள் ஓர் ஆண்குழந்தை பெற்றாள். அப்

போது அவளுடைய கூட்டக் குடும்பத்தினர்கள் அவள் ஸினவில்
பிள்ளை பெற்றுளென்று குறைகூறத் தொடுத்தார்கள்.

அதினால். அவள் மனவேஷ்டை யடைந்து மிக்க கவலைகொண்டு
இனி இந்தப் பிள்ளையை என்ன செய்கிறதென்று பலவாறு யோ
சித்து அந்தப்பிள்ளையை எடுத்துக்கொண்டு போய் அதுடைய தகப்
பனிடம் கொடுத்துவிடலாமென்ற யோசனையை தன்னுள் திட்டப்
படுத்தினாள். அப்படியிருக்கும் காலத்தில் ஒருநாள் ஹலரத் உம
றுபுனுல்கத்தாபு றலியல்லாஹு அன்ஹு மஜீதில்இருந்து ஜனங்
களுக்கு (வ அலு) உபதேசம் சொல்லிக் கொண்டிருக்கும்போது அந்
தப் பெண்பிள்ளை மேற்படி குழந்தையை எடுத்துக் கொண்டு அவர்க
ளுக்கு முன்னால்வந்து நின்று, ஓ! அமீறுல்முஃமினீனே நான் சொல்
லும் விண்ணப்பத்தை சற்றுகேட்டுக்கொள்ளுங்கள், என்னவெனில்;
இதோ என் மடியிலிருக்கும் இந்தப்பிள்ளை தங்கள் மகன் அபூஷஹ
மாவுக்குப் பிறந்ததாக இருக்குமென்றாள். அதற்கவர்கள், அப்படி
இருக்குமாகில் அதன் வரலாற்றை விரிவாக சொல்லென்றார்கள்.
அவள் நடந்த விஷயங்களைச் சொல்லத் தொடுத்தாள்.

அதாவது; ரியாலுன்னலரா என்னும் கிதாபிலும் தை
லமீ, இமாமுக்குள்ள, முன்தகா வென்னும் கிதாபிலும் முஜா
ஹிது, றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் வந்திருக்கிறது.
அவர்கள் சொல்கிறது யாதெனில்; ஒருநாள் இபுனு அப்பாஸ், றலி
யல்லாஹு அன்ஹுவுடைய வரிசையைப் பேசிக் கொண்டிருக்
கும்போது இபுனு அப்பாஸ், றலியல்லாஹு அன்ஹு அவர்கள்
தாங்கள் மய்ங்கிற மட்டிலும் அழுதுக்கொண்டு குர்ஆனை ஓதி
அதின்படி அமல்செய்து அல்லாவுடைய கருமத்தில் பழிப்பவனு
டைய பழிப்பைப் பயப்படாமல் ஏவப்பட்டதுபோல் அல்லாவுடைய
கட்டளைகளை நடத்தின மனிதனுக்கு அல்லா றஹ்மத்துச்செய்வான்.
ஆகவே உமறு றலியல்லாஹு அன்ஹு தம்முடைய மகன்பேரில்
ஹத்தை நடத்தி அதில் அவனை கொன்றுவிட்டாரென்று சொன்
னார்கள். அப்போது அவர்களிடத்தில் உமறு கத்தாபு ஹத்துசெய்த
தையும், மகனைக்கொன்ற விபரத்தையும் சொல்லுங்களென்று கேட்
டதற்கு அவர்கள் சொன்னதாவது;ஒருநாள் நானும் உமறும் பள்ளி
வாயலில் இருந்தோம். மனிதர் அவர்களைச் சுற்றி கூடி இருந்
தார்கள்.

அப்போது ஒரு பெண்பிள்ளைவந்து (அஸ்ஸலாமு அலைக யா அமீ
றுல் முஃமினீன்) என்று சொன்னாள். உடனே உமறு கத்தாபு

றலியல்லாஹு அன்ஹு அவளுக்கு பதில்சொல்லி, உனக்கு என்னிடம் என்ன ஹாஜத்துண்டென்று கேட்டதற்கு, அவள் ஆம் தங்களுடைய இந்தப் பிள்ளையைப் பிடியுங்கள் சொல்கிறேன் என்று சொன்னாள். அப்போது அவர்கள் நானுன்னை அறியேனென்று சொல்லவும், அவள் அழுதுக்கொண்டு அமீருல் மூஃமினீனே! தாங்கள் பெறாவிட்டாலும் தங்களுடைய பிள்ளையுடைய பிள்ளை என்று சொன்னாள். அப்போது அவர்கள் என் பிள்ளையில் எந்த பிள்ளை என்று கேட்டார்கள். அதற்கவள் ‘அபூஷஹ்மா’ வென்று சொன்னாள். அப்போது அவர், ஹலாலாகப் பெற்றதா? ஹறாமாகப் பெற்றதா? வென்று கேட்க, அதற்கவள் என்புறத்தால் (ஹலால்) அவர் புறத்தால் (ஹறா)மென்றுச் சொன்னாள். அப்படிச்சொல்லவே அவர்கள் அவளிடத்தில் பொய்சொல்லாமல், உண்மைசொல் அல்லாவை பயந்துக்கொள் என்று சொல்லி அதன் விஷயம் எவ்வாறு? சொல் என்று கேட்க, அதற்கவள் அமீறுல் மூஃமினீனே! நான் ஒரு நாள் (பனின்) நஜ்ஜாருயுடைய தோட்டத்தின் வழிநடக்கும்போது தங்கள் மகன் அபூஷஹமா, எஹூதி முச்சந்தியில் கள்குடித்து மயங்கி ஆடிஆடி வந்து என்னை அந்தத் தோட்டத்தில் இழுத்து ஆண்பிள்ளை, பெண்பிள்ளையில் நின்றும் பெற்றுக்கொள்வதை என்னில் நின்று பெற்றுக்கொண்டார். அப்போது எனக்கு போதக்கேடு உண்டாயிற்று. நான் என்னுடைய கருமத்தை என்னைச் சேர்ந்தவர்களைத் தொட்டும் மறைத்திருந்தேன், எனக்கு பேறுகாலம் ஆனபோது நான் தனித்த ஓர் இடத்தில் போய், இந்தப்பிள்ளையைப் பெற்று எடுத்துக்கொல்ல நாடினேன், எனக்கு இரக்கம்வந்து தங்களிடம் இப்பிள்ளையைக் கொண்டுவந்தேன். ஆகையால் அவருக்கு மெனக்குமிடையில் அல்லாவுடைய தீர்ப்பைச் சொல்லுங்களென்று சொன்னாள்.

அப்படிச்சொல்லவே உமறு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு ஜனங்களை அழைக்க எல்லோரும் பள்ளிவாயலில் வந்துகூடினார்கள். அப்போது உமறு கத்தாபு றலியல்லாஹு அவர்கள் எழும்பி ஜனங்களை நோக்கிச் சொன்னதாவது; நான்போய் வருமளவும் ஒருவரும் இந்த இடத்தைவிட்டுப் பிரிந்திடாதேயுங்கள். என்றுசொல்லி என்னைக் கூட்டிக்கொண்டு அவர்கள் வீட்டில்போய் கதவைத்தட்டி இவ்விடத்தில் என்மகன் அபூஷஹமா இருக்கிறானாவென்று கேட்டார்கள். அப்போது அவர் ஒஜீவனத்தி லிருக்கிறாரென்று சொல்லப்பட்டது, உடனே அவர்கள் வீட்டிற்குள்சென்று மகனே! சுருக்

காப்திண்ணு; ஏனென்றால்; உனக்கு துனியாவில் இது கடைசியான ஓஜீவனமாக இருக்கப் போகுமென்றார்கள். இபுனு அப்பாஸ் றலி யல்லாஹு அன்ஹு சொல்கிறார்கள். அவர்கள் இப்படி சொல்லவே அவருடைய நிறம் பேதலித்து சரீரம் நடுங்கி கையில் இருந்த ஓஜீவனம் அப்படியே விழுந்துவிட்டது. அப்போது அவரைப் பார்த்து மகனே! நான் யாரென்றுகேட்டார்கள். அதற்கவர், நீங்கள் என்னுடைய தகப்பனார் அமீருல் முஃமினீன் என்று சொன்னார்.

அப்போது எனக்கு நீ வழிப்பட ஹக்குண்டா இல்லையா? வென்று கேட்டார்கள். அதற்கு அவர், ஆம்! நான் உங்களுக்கு வழிப்படுவது இரண்டு விதத்தில் கடமையாக இருக்கிறது. 1-வது நீங்கள் தகப்பனென்றதற்கும், இரண்டாவது, நீங்கள் முஃமினானவர்களுக்கு அரசனாயிருப்பதற்கும் என்று சொன்னார். அப்போது அவர்கள் உனது நபியுடைய ஹக்கைக்கொண்டும் உன் தகப்பனுடைய ஹக்கைக்கொண்டும் உன்னிடம் கேழ்க்கிறேன்; நீ எஹூதி முச்சந்தியில் விருந்தாளியாயிருந்து அவ்விடத்தில் கள் குடித்து மயங்கினதுண்டா? வென்று கேட்டார்கள். அதற்கவர், ஆம்! நான் தௌபாச் செய்திட்டேன் என்றார். அதற்கவர்கள் முஃமினுடைய விடுமுதலும் தௌபாவாயிருக்கும், உன்னிடத்தில் அல்லாவைக்கொண்டு கேழ்க்கிறேன். நீ (பனின் நஜ்ஜா)ருடைய தோட்டத்தில் புகுந்து அவ்விடத்தில் ஒரு பெண்பிள்ளையைக்கண்டு, அவளுடன் கூடினதுண்டா? என்றார்கள். அவர் வாய் பேசாமல் அழுதார். அப்போது, அவர்கள் மகனே! குற்றமில்லை, உண்மைசொல் அல்லாஹுத்தஆலா உண்மை சொல்லுகிறவர்களை பிரியம்வைப்பான் என்று சொன்னார்கள். அப்போது அவர் அந்தச்செய்தி நிஜம்தான், நான் அதின் பேரில் வியாரப்பட்டு தௌபாச்செய்தவனா யிருக்கிறேன் என்று சொன்னார்.

அவர் இப்படிச் சொன்னதை உமறு றலியல்லாஹு அன்ஹு கேட்டு; உடனே கையாலே கழுத்தைப்பிடித்து பள்ளிக்கு இழுத்துக்கொண்டு வந்தார்கள். அப்போது அவர் என் தகப்பனே! என்னை லெச்சைகொடாமல், வாளெடுத்து துண்டுதுண்டாய் என்னை நறுக்கிடுங்களென்று சொன்னார். அப்போது அவர்கள் அல்லாவின் சொற்படி (வல்யஷஹத், அதாபஹுமா, தாயி பதுன், மினல் முஃமினீன்) எஃனி. ஸினாசெய்தவள் ஸினாசெய்தவன் இவ்விருவர்களுடைய அதாபுக்கு முஃமினானவர்களில் ஒருகூட்டம் ஹாஸிறாக இருக்கவேண்டுமென்று, அல்லாஹுத்தஆலா சொல்லியிருப்பதை ... இல்

181246

லையோ? என்று சொல்லி அவரை நபிநாயகத்துடைய அஸ்ஹாரிகளுக்கு முன்பாக பள்ளிக்கு இழுத்துக்கொண்டு வந்து கேழ்க்க அவளின் சொல்லை அபூஷ்ஹமா உண்மையாக்கி வைத்தார். என்று சொல்லி பின்பு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய அடிமை (அபுல்ஹு) என்பவரைக் கூப்பிட்டு, ஓ! அபுலஹே, நீ என் மகனைப் பிடித்து கசையால் (100) அடி அடிக்கிறதில் திரைக் குறைச்சல் செய்யாதே என்றார்கள். அவர் நான் அடியேனென்று சொல்லி அழுதார். அப்போது அதற்கவர்கள் ஓ! அடிமையே, நீ எனக்கு வழிப்படுவது றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுக்கு வழிப்படுவதா யிருக்கும். ஆகையால் நான் ஏவியதை நீ செய்யென்று சொன்னார்கள். இபுனு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு சொல்கிறார்கள். உமறு றலியல்லாஹு அன்ஹு இப்படிச் சொல்லவே; அபுலஹ், என்பவர் அபூஷஹமாவின், உடைய பிடவையை உரிந்தார். உரியவே கூடியிருந்த ஜனங்களெல்லாம் கூக்குரலிட்டார்கள். அப்போது அபூஷஹமா உமறு றலியல்லாஹு அன்ஹுவைப் பார்த்து என் தகப்பனே! எனக்கு கிருபை செய்யுங்கள் என்று சொன்னார். அப்போது அவர்கள் அழுதவர்களாய் மகனே! நான் உன்னை இப்படி செய்வது உனக்கு உன்னுடைய நாயன் (றஹ்மத்து)ச்செய்யவும் அதனால் எனக்கு கிருபைபுரியவும்தான் இப்படி செய்கிறேனென்று சொல்லிவிட்டு அடிமையைப் பார்த்து அடியென்றார்கள்.

அவர் அடிக்கவே, அபூஷஹமா காப்பாற்றத் தேடதேட உமறு றலியல்லாஹு அன்ஹு அபுலஹைப்பார்த்து அடியென்றே சொல்லிக்கொண்டிருந்தார்கள். (70) எழுபது அடியானபோது, அவர் என் தகப்பனே! எனக்கு ஒருமிடர் தண்ணீர் தாருங்கள் என்று கேட்டார். அப்போது அவர்கள் மகனே! உன்னுடைய நாயன் உன்னைப்பற்றி பொருந்தினவனா யிருந்தானாகில் நீ ஒருகாலமும் தாகிக்க மாட்டாய், இந்தத் தண்ணீருக்குப்பதிலாக மேலைக்கு ஒருமிடர் தண்ணீர் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் உனக்கு புகட்டுவார்கள். என்று சொல்லிவிட்டு அபுலஹைப்பார்த்து, அடி என்றார்கள். அவர் அடித்தார் (80) எண்பது அடியானபோது அவர் தகப்பனைப் பார்த்து (அஸ்ஸலாமு, அலைக்கு) என்று சலாம் சொன்னார். அதற்கவர்கள், (வஅலைக்கஸ்ஸலாம்) என்று ஜவர்பு கொடுத்து மகனைப்பார்த்து நீ முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களை சந்தித்தால் அவர்களுக்கு என் சலாம்சொல்லி நான் உம

னை(குர்ஆன்) ஓதினவராகவும் மார்க்கவரம்புகளைச் சரிவர நடத்தியவராகவும் விட்டுவிட்டு வந்தேனென்று சொல்லென்று சொல்லி அபுலஹைப்பார்த்து அடியென்று சொன்னார்கள். அவர் அடித்தார் (90) தொண்ணூறு அடியானபோது அவருடைய பேச்சுவிழுந்து குழைந்துபோயிற்று. இபுனு அப்பாஸ்றலியல்லாஹு அன்ஹு சொல்கிறார்கள்; அபூஷஹமாவுடைய நிலைமை இப்படியாகவே அஸ்ஹாபிகள் உமறு றலியல்லாஹு அன்ஹுவிடத்தில் சொச்சத்தை நாளை அடியுங்களென்று சொன்னார்கள்.

அதற்கு அவர்கள் 'மாறு செய்ததை பிற்படுத்தாததுபோல் வேதனையும் பிறபடுத்தப்படாது' என்று சொன்னார்கள். உடனே ஒருவர் அபூஷஹமாவுடைய தாயார் இடம்போய் இந்த செய்தியைச் சொல்லவே, அவர்கள் அழுதவர்களாய் வந்து ஓ! உமரே! நான் ஒவ்வொரு அடிக்கு ஒரு(ஹஜ்ஜும்)அநேக காணயங்களும் சதகா என்னும் தருமதானம் கொடுக்கறேனென்று சொன்னார்கள். அப்போது ஹஜ்ஜும் சதக்காவும் ஹத்துக்கு ஈடாகாதென்று சொல்லி விட்டார்கள். அப்பால் அபுலஹு அடித்தார். கடைசி அடியானபோது அபூஷஹமா கீழேவிழுந்து விட்டார். விழவே, உமறு றலியல்லாஹு அன்ஹு அழுதுக்கொண்டு மகனே! அல்லாஹுத்தஆலா உம்மைவிட்டும் பாவத்தை அழித்து விட்டானென்று சொல்லி மகனுடைய தலையைத்தூக்கி மடியில் வைத்து இவர் சுத்[illegible]னவர், ஹத்துமுடிவில் மவுத்தானவர். தகப்பனு முடுகுதலானவர்களும் இரங்காதவர்களாயிருக்கிறார்கள் என்றுசொல்லி அழத் தொடுத்தார்கள். அப்போது மனிதர்கள் பார்க்கும்போது அபூஷஹ்மா துனியாவை விட்டும் பிரிந்திட்டார்.

அவர் மவுத்தான நாளைப்பார்க்கினும் வருத்தமான ஒருநாளைக் காணப்படவில்லை. மனிதரெல்லாம் அழுது சப்தமிட்டார்கள், (இபுனு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹுமா சொல்லுகிறார்கள்) அபூஷஹமா மவுத்தாகி (40) நாற்பது நாளானபோது, ஒருநாள் ஜும்ஆவுடைய காலையில் (ஹுதைபதுல் எமானி) றலியல்லாஹு அன்ஹு எங்களிடம் வந்து, நான் இன்று றசூல்சல்லல்லாஹு அலைஹிவசல்லமை கனவில் கண்டேன். அவர்களுடனே அபூஷஹமா இரண்டு பச்சை ஆடை அணிந்தவராய் அவர்களுடனே இருந்தார். அப்போது றசூல்சல்லல்லாஹு அலைஹிவசல்லம் என்னைப் பார்த்து, நீர் உமறுக்கு நான் சலாம் சொன்னதாய் சொல்லி இப்படித்தான் குர்ஆனை ஓதி மார்க்க வரம்புகளை நீதி நெறியாக நடத்

அப்படி அல்லாஹு த்தஆலா எவினுனென சொல்லுமென்று சொன்னார்கள். அதன்பிறகு அபூஷஹமா என்னை நோக்கி ஓ! ஹுதைபாவே, என்றுகூப்பிட்டு, நீர் என்தகப்பனுருக்கு நான் சலாம் சொன்னதாகச் சொல்லி, அவர்கள் என்னைத் துப்புறவாக்கினதுபோல் அல்லாஹு த்தஆலா அவர்களை துப்புற வாக்குவானென்று சொன்னதாக சொல்லுமென்று ஹுதைபா றலியல்லாஹு அன்ஹு சொன்னதாக இபுனு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு சொல்லி முடித்தார்கள்.

(பஸல். ஸினுவின் ஹத்தில் பேசும் பிரிவு)

அல்லாஹு த்தஆலா (குர்ஆன்) ஷரீபில் திருவளமாகிறுன். (அஸ்ஸானியது, வஸ்ஸானி) எஃனி, ஸினு செய்த பெண்பிள்ளையும் ஸினு செய்த ஆண்பிள்ளையுமாகிறது அவர்களுக்கு கட்டளை உங்கள்பேரில் ஓதப்பட்டவேதமாகிய குர்ஆன்ஷரீபி லுண்டாயிருக்கிறது. அதாவது அவர்களில் ஒவ்வொருவர் அடங்கலையும் கசையால் 100 அடி அடியுங்கள். (வலாதவுகுதுகும், பிஹிமா, றஃபதுன், பீதீனில்லாஹி, இன்குன்தும் துஃமினூன பில்லாஹி வல்யௌமில் ஆகிரி) நீங்கள் அல்லாவைக்கொண்டும் ஒடுக்கத்து நாளைக்கொண்டும் (ஈமான்)கொண்டவர்களா யிருப்பீர்களானுல் அல்லாவுடைய ஹத்தை நிறைவேற்றுகிறதில் அந்த இரண்டு பேர்கள் மீதிலும் உங்களுக்கு கிருபை தொடவேண்டாம் என்பதே.

இன்னும் அந்த இரண்டு பேருக்கும் ஹத்துசெய்யும்போது மூஃமினுனவர்களில் ஒருகூட்டம் ஹாஸிருக வேணுமென்பதே. இன்னும் தன் பிஹுல்காபிலீன், என்றகிதாபில் வருகிறதாவது; துன்யாவில் ஹத்தடிக்காவிட்டால் (ஆகிறத்தில்) நெருப்பு கசைகொண்டு ஹத்தடிக்கப்படுமென்று ஹதீதில் வந்திருக்கிறது. ஆகவே இப்போது சொன்ன ஹத்தாகிறது கலியாண முடித்து ஸினு செய்யாதவர்களுடைய ஹத்தாக இருக்கும். இனி கலியாணம் முடித்து ஸினு செய்தவர்களுக்கு ஹத்தாகிறது, சாவுமளவும் நாட்டி வைத்து கல்லெறியப்படும் (ஹதீஸ்) கலியாண முடித்தபின் ஸினு செய்த ஆண் பெண் இணைச்சாகிறவரைக்கும் நாட்டிவைத்து கல்லெறியுங்களென்றும் இணைவைத்து வணங்குகிற குற்றத்திற்கு பின்னாலே வலுப்பமான பாவமாகிறது தனக்கு ஹறுமான பெண்பிள்ளையினுடைய கெர்ப்பத்தில் தன்னுடைய இந்திரியத்தை வைக்கிறதுபோல் வலுப்பமான பாவம் ஒன்றுமில்லை என்றும் ஏழுவானமும் ஏழு பூமியும் ஸினு செய்கிறவர்களுடைய அபத்தின் நாற்றத்தைப்பற்றி (லஅனத்து) சூனிவு செய்

வார்கள். தவிர நாகவாதிகளும் (லஅனத்து) செய்வார்கள் என்றும் ஆகவே ஒருவன் காபிரான பெண்பிள்ளையுடன் ஸினச்செய்தானுகில் அவன் அவளைப்போலா யிருக்குமென்றும் நமது நாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளினர்கள். இன்னும் ஹதீஸில் வந்திருக்கிறதாவது;

(ரிவாயித்து) ஜஹன்னமென்கிற நரகத்தில் (ஜுப்புல்ஹுசன்) என்றொரு ஓடை இருக்கிறது, அதில் அநேகம் பாம்புகள் நட்டுவாக்காலி இவைகளிருக்கின்றன. அவற்றுள் ஒரு நட்டுவாக்காலி கோவேறுகழுதைக்கு சமமாகும் ஒவ்வொன்றுக்கு (70) எழுபது முள்ளுகளுண்டு, ஒவ்வொரு முள்ளில் ஒவ்வொரு நஞ்சுப்பை உண்டு. ஸினசெய்தவர்களை அவ்வோடையில் தள்ளப்படும். அதில் பாம்பும் நட்டுவாக்காலியும் அவனை கொட்டும். ஒருதடவை கொட்டினுல் அதன் வருத்தம் ஆயிரம் வருடத்திற்கு இருக்கும். பின்பு அந்த தசை துண்டாய் விழுந்து அபத்திலிருந்து சீழும் ஜலமுமாக ஓடும். அவர்களை மலக்குகள் சாட்டையால் அடிப்பார்கள். அடியினுடைய வருத்தம் பொறுக்க ஏலாமல் நோகுதே என்று அழுது சப்தமிட்டால் அவர்கள் இந்த அழுகை எங்கே போய்விட்டது? நீ துன்யாவில் சிரித்து சந்தோஷமாக பெருமையுடன் ஸினசெய்தாய், கொஞ்சமும் அல்லாவுக்கு பயந்து வெட்கப்பட்டா யில்லையே? என்று சொல்லி (ஸபானியா) மலக்குகள் கடுசான அதாபு செய்வார்கள்.

(ரிவாயத்து), சீமான்தனமும் ஸினவும் ஒரு இடத்தில் சேர்ந்து ஒன்றுப்பட்டிருந்தென்றும், ஒரு ஊரில் ஸின மிகுதமானல் (ஒபா) எனும் பேதி உபத்திரவம் அதிகப்படுமென்றும், ஸின செய்கிறவனுக்கு பருகத்து மாறிப்போய்விடுமென்றும், அவன் முகத்தில் அருள் மாறிப்போகுமென்றும், மனிதர்களுடைய மனதில் கோபமாக்கப்பட்டவ னுகிவிடுவானென்றும் ஆகிறதில் அல்லாஹுத்தஆலா அவன்பேரில் கடுசாகிய கோபத்துடன் கேள்வி கணக்கு கேட்டு நரகத்தில் அவனை அல்லாஹுத்தஆலா சேர்த்துவைப்பானென்றும் இபுனு அப்பாஸ் முதலிய சஹாபாக்கள் சொல்லி இருக்கிறார்கள். இன்னும் அல்லாஹுத்தஆலா அவனுடைய வேதமாகிய நமது (குர்ஆன் ஷரீபில்) திருவளமாகிறான் (வஅம்மா, மன், காப, மகாம, றப்பிஹீ, வன்ஹன், னப்ஸ, அனில்ஹவா, பஇன்னல், ஜன்த, ஹியில்மஃவா) எஃனி, யாதாமொருவன் பாவத்தைநாடி அதைச்செய்யப்போகும் தருணத்தில் தனது நாயனை பயந்து தன் நப்சை சரீர இச்சையைவிட்டும் விலக்கிக்கொள்வானுகில் திடனுக

அவன் ஒதுங்கும் தலம் சுவர்க்கலோகமாக யிருக்குமென்று திருவளமாயிருக்கிறுன். ஆகச்சே, எல்லா ஜனங்களும் ஸினைவைப்போலொத்த பெரும்பாவங்களை விட்டும் நீங்கவேண்டியது பறுலா இருக்கும். (ஹிகாயத்து) நாயகம் (சையிதினு) உமறுப்னுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் காலத்தில் ஒரு வாலிபன் (இஷா) தொழுகைக்காக வெளியில் புறப்பட்டு வரும்போது அவரை ஒரு பெண்பிள்ளை என்னுடன் சேர்க்கைக்குவர சம்மதமாவென்று ஜாடை காட்டினுள். உடனே அம்மனிதனுடைய மனம் அவள் பக்கலில்சாய்ந்து அவளைத்தொடர்ந்து அவள் வீட்டின்கண்ணே போனபின் (இன்னல்லதி,ன த்தகு, இதாமஸ்ஸஹும்,தாயிபுனமினஷ் ஷைத்தானி, தஸக்கறா) அல்லாஹுத்தஆலாவை பயந்து தக்வா செய்யும்படியான ஜனங்களுக்கு ஷைதானில் நின்றும் கெடுதலான (வசுவாசு) என்னும் கலவரம் சத்தியத்தைவிட்டும் திருப்பும்படியான நிலைமையுண்டாக்கி விடுமாகில் அவர்கள் அல்லாஹுத்தஆலாவின் வேதனையும் அவனுடைய சவாபையும் நினைப்பார்களென்று அல்லாஹுத்தஆலா திருவளம்பற்றியதை அவர் ஞோட்டமிட்டு பயந்து இந்த ஆயத்தை ஒதினவுடனே புத்தியமங்கி போதைக்கேடாய் அடித்து விழுந்தனர். உடனே அப்பெண்பிள்ளை தன் வீட்டின் வாயலின்பேரில் இழுத்து எறிந்தாள். பின்னர் அம்மனிதனின் தகப்பன் அங்குவந்தார். அப்பால் அவர் தெளிந்தபின் ஆய்! மகனே! இது என்ன காரணமென்று கேட்ட போது அவர் இந்தஆயத்தை இரண்டாவதும்ஒதினுர், உடனே அவர் (றூஹு) அடங்கி மாணமுற்றுர். அப்பால் அவரை அடக்கி முடிந்தபின் இச்செய்தி ஹலாத்து உமறுபுனுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு தெரியவந்தது. அப்போது அவர்கள் அன்னவரின் கபுரினிடமாக வந்துநின்று, ஒ இன்னுனே! (வலிமன், காப, காமறப்பிஹீ, ஜன்னதான்) என்னி. நாயனுடைய சமூகத்தில் நிற்கிறதை பயந்தவனுக்கு இரண்டு சொர்க்க மிருக்குமென்ற இந்த ஆயத்தை ஓதினுர்கள். உடனே அவ்வாலிபன் ஆண்டவன் எனக்கு அந்த இரண்டு சொர்க்கத்தையும் அவன் கிருபைகொண்டு கொடுத்தானென கபுரிலிருந்து ஜவாபு கொடுத்தனர் றலியல்லாஹு அன்ஹு.

(பஸல், பாவத்தைவிட்டும், நீங்கி தவ்பாசெய்வதில் பேசும் பிரிவு.)

அல்லாஹுத்தஆலா திருவளமாகிறுன். (யாஅய்யு ஹல்லதீன் ஆமனூ தூபு, இலல்லாஹி, தௌபதன் நஸூஹா). என்னி, ஓ! மூஃமினுகிய ஜனங்களே! ஆண்டவன் உங்கள் பாவங்களைப் பொறுத்து

ஆறுகள் அருவிகள் அதன்கீழில் ஓடிக்கொண்டிருக்கக்கூடிய சுவனலோகத்தில் உங்களைச் சேர்க்கப்போகும்." ஆனதால் நீங்கள் பாவத்தை விட்டும் நீங்கி கலப்பறுதலாகிய தௌபாச்செய்து அல்லாஹுத்தஆலா அளவில் மீட்சி பெறுங்களென்று அல்லாஹுத்தஆலா திருவளம்பற்றினன். ஆனபோதே பாவங்கள் இரண்டு வகைப்படும். (1) வது சிறு பாவங்கள், அதாவது கண்ணாலும் நாவாலும் வேறு பலவிதத்தாலு முண்டாகக் கூடியவைகளாம். அப்பாவங்கள் நன்மையான வணக்கங்கள் செய்வதுகொண்டு மன்னிக்கப்படும். இவைகள் சிறு பாவந்தானென்று லேசாக எண்ணாமல் செய்ய மிகவும் பயப்படல்வேணும். இனி, சிறுபாவங்கள், பெரும்பாவங்கள் இவைகளைபற்றிய விரிவானவிபரங்களை பெரியகிதாபுகளில் பார்த்துதெரிந்து கொள்ளவும்;(2)இரண்டாவது பெரும்பாவம் அதாவது;கள்ளு, ஸினா, புரம், கோள், இவைகளைப்போன்ற பாவங்களுமேயாம். இப்பாவங்கள் தௌபாவின்றி மன்னிக்கப்படாது. இன்னும் அறிந்துக்கொள் தௌபாவிற்கு (3) ஷறத்துகளுண்டு. (1)-வது தான்செய்த பாவத்தைக் குறித்து கைசேதப்பட்டு அழுகிறது (2)-வது செய்தபாவம் அல்லது அதுபோல்கொற்ற பாவத்தளவில் இனி மீளமாட்டேனென்று நல்கருத்து வைக்கிறது, (3)-வது எக்ரோத்தில் பாவத்தை கொளிகி இருந்தாலும் அல்லது பாவத்தளவில் மீளவேணுமென்றிருந்தாலும் அந்த எண்ணத்தையெல்லாம் அடியோடேவிட்டு நீங்கிக்கொள்கிறது. ஆகவே அவைகளில் முக்கியமான ஷறத்தாகிறது, தான் செய்த குற்றத்தின்பேரில் கைசேதப்படுகிறதா யிருக்கும். இதற்காகத்தான் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் தௌபாவாகிறது கைசேதப்படுகிறதா யிருக்குமென்று திருவளமானர்கள்.

(ரிவாயத்து) பாவத்தைவிட்டும் தௌபாச்செய்தவன் பாவமில்லாதவன் போலாக இருக்குமென்று ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவளமானர்கள். ஆனபோதே, ஒருவன் பாவத்தைச்செய்துக்கொண்டு (இஸ்திகுபார்) என்னும் பிழை பொறுக்கத் தேடுகிறவன் தனது நாயனை பரிகாசம் பண்ணுகிறவனைப் போலாக இருக்கும் இதற்கிணங்கவே ஒருவர் கவி சொல்லுகிறார்.

வாயினால், ஆஸ்தகபிருல்லா, வென்பதால்
தாயிமன், லம் எக்பலன், னம்தி சால்.

எஃனி. வழிப்பாடன்றி (அஸ்தகுப்ருல்லாஹ்) நான் அல்லாவிடம் பிழை பொறுக்கத் தேடுகிறேன் என்று வாயினால் சொல்லு

வதை ஒப்புக்கொள்ளப்படாது என்பதாம். (ஹதீஸ்) ஒரு முஃமினாகிய மனிதன் ஒரு பாவம்செய்தால் அவனுடைய கல்பில் ஒருகறுப்பு புள்ளி விழும். ஆகவே (அல்லாஹுத்தஆலா குர்ஆன் ஷரீபில் திருவளமாகிறான்) (கல்லாபல்றான, அலா குலூபி, ஹிம், மா கானூ எக்ஸிபூன்) எஃனி. தௌபாச்செய்து பிழைபொறுக்கத்தேடினால் அப்புள்ளியை மாற்றப்படும். பிழைபொறுக்கத் தேடாவிட்டால் அவன் கல்பை அது மூடிவிடுமென்று இனி கலப்பறுதலான தௌபாச்செய்தவன் பாவம் செய்யாதவனைப்போலாயிருக்குமென்றும் நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவளம் பற்றினார்கள்.

(ஹதீஸ்) தௌபாவை மேலைக்கு செய்யலாமென்று நினைத்து அதை பிற்படுத்திக் கொண்டார்களே அந்த ஜனங்கள் கெட்டு நாசமாய்ப்போவார்கள். இருந்தாப்போலிருந்து அவர்களை மரணம்வந்து திடீரென்று பிடித்துக் கொள்ளுமென்று சகதசற்குரு முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அருள் செய்தார்கள். இன்னும் (ஹதீஸில் வந்திருக்கிறது) ஒரு மனிதனுடைய தோலி அல்லாஹுத்தஆலாஉடைய பயங்கரத்தால் சிலுசிலுத்தால் அவனுடைய பாவங்கள் உலர்ந்தமரத்தின் இலைகள் உதிர்ந்துபோவது போல் உதிர்ந்துவிடுமென்று சொன்னார்கள். இன்னும், யாராகிலுமொரு மனிதனுடைய கண் அல்லாவை பயந்து தன் பாவங்களை நினைத்து கண்ணீர்வடியும்படி அழுதால் ஒவ்வொரு துளிகளையும் மீஸான் தராசில் (உஹது) மலையைப்போல் சமமாக நிறுக்கப்பட்டு ஒவ்வொரு துளிக்கும் பகரமாய் சொர்க்கலோகத்தில் ஒவ்வொரு வீட்டை கொடுக்கப்படும். அதைச்சூழ அநேக பட்டணங்களும், அநேக மாளிகைகளும், தோப்புகளும், மட்டிட முடியாத நிஅமத்து சுகங்களும், உண்டாயிருக்குமென்றும், நமது நாயகம் முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவளம் பற்றினார்கள். (ரிவாயத்து) அப்துல்லா இபுனு உமறு றலியல்லாஹுவைத் தொட்டும் வருகிறது. யாராகிலுமொருவன் தான் செய்த பாவத்தை நினைத்து அவன் மனது பயப்படுமானால் அவனைவிட்டும் அந்தப் பாவத்தை அழிக்கப்பட்டு விடுமென்று சொன்னார்கள்.

(ரிவாயத்து) அல்லாஹுத்தஆலாவை பயந்து அழுதவன் கறந்த பால் மடியில் போகிறமட்டில் நரகத்தில் புகுதமாட்டான் என்று

ரசூல்சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவளமானார்கள். ஆதலால் ஆய்! எனது முஸ்லிமாகிய சகோதரர்களே! நாம் நம்முடைய பாவங்களை நினைத்து மிகுந்த சஞ்சலப்பட்டழுது நப்சை கெட்ட வழியில் போகாமல் தடுத்து அதை அல்லாவின் அதாபைக்கொண்டு பயமுறுத்தி அவனுடைய வணக்கத்தில் வழிப்பட செய்யவேண்டும். இதற்கிணங்கவே ஸாலிஹீன்களிற் சிலர் அரபியில் சில பைத்துகள் சொல்லியிருக்கிறார்கள். 1-வது பைதின் பொருள். ஓ மனிதனே! நீ உன்னுடைய நப்ஸிடத்தில் என்னென்ன பாவம் செய்தாய்? அல்லாவின் நிஅமத்துகளுக்கு (சுக்குரு) செய்தாயாவென்று கேழ்வி கணக்கு கேள். கியாமத்து நாளையில் நீ அல்லாஹுத்தஆலாவின் சமுகம் நிறுத்தாட்டப்பட்டு உன் பாவங்களைக் குறித்து உன்னை கேழ்க்கப்படு முன்பாகவே நீ அதை இங்கேயே கேட்டு சிட்சை வருத்து. அதன் கருத்து யாதெனில்; அல்லாஹுத்தஆலா அந்த நபுசை அநா[illegible] செய்யுமுன்பே அதை வணக்கத்தில் வழிபடச் செய்து, துன்யாவின் கஷ்டங்கள் துன்பங்களை அதற்கு அனுபவிக்கச் செய்து புத்திவருத்து என்பவே.

2-வது இன்னும் அந்த நபுசை அல்லாஹுத்தஆலாவின் பயங்கரமென்னும் நெருப்பைக்கொண்டு பிடி. அதெப்படிப்பட்டதானால்; தோலிகரிகிறதற்குமுன் சதை கரிந்திடுமே அப்படிப்பட்ட பயங்கரமாகும். 3-வது எப்போதாவது ஒரு நாளையில் நீ கண்ணீர் விட்டு அழுதால் கல்பில் நின்றும் இரத்தத்துடன் கலந்து வடியக்கூடிய கண்ணீரைக் கொண்டு ஆகிறத்தை மனதில் நினைத்து, கடினமாய் அழுதல் வேண்டும். 4-வது இன்னும் நீ பெற்றுக் கொள்ளும் ஒஜீவனம் அல்லது தண்ணீரைக் கொண்டு தின்னக் கொடுத்து நப்ஸை சந்தோஷப்படுத்துவதை விட்டும், இரவில் நீ நித்திரை செய்து சுகத்தைப் பெறுவதை விட்டும், உன் மீளும் தலம் இன்னதென்று உனக்கு வெளிபாகிறவரை பயந்து வணக்கத்தைப் பற்றிப் பிடித்துக்கொள்; ஜெயம் பெறுவாய். ஆகையால் அல்லாஹுத்தஆலா நம்மனைவருக்கும் கலப்பு[illegible]தலான தௌபாவைக் கொடுத்து அவனை பயந்து நல் வணக்கங்கள் செய்துவந்த சாலிஹீன்கள் கூட்டத்தில் சேர்ப்பானாக. ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

முற்றிற்று.

18|296

அஸ்ஹாபுல் கஹபு ஓர்றகீம்.

நமது வேதவாக்கியமாகிய குர் ஆனில் சொல்லிய (அஸ்ஹாபுல் கஹ்பு) என்னும் மலைக்குகையை யுடையவர்களுக்கும் தக்பானூஸ், இராஜனுக்கு மிடையில் நடந்த வரலாறு சரித்திரங்களும் அன்னவர்கள் ஷை இராஜனுக்கு பயந்து (றகீமென்னும், மலையில்போய் மறைந்ததும் (309) வருஷத்திற்குப்பின் அல்லாஹுத்தஆலாவின் குதுறத்துக்கொண்டு ஹயாத்துப்பெற்று அவர்களில் ஒருவர் ஒஜீவனம் வாங்க ஊருக்குள் வந்ததும், அவர் பிடிக்கப்பட்டு அக்காலத்திலிருந்த பாதுஷாவின் கைதியாகி விடுவிக்கப்பட்டு மறுபடியும் அவர் மலைக்குப்போனதும், அவரை பின்தொடர்ந்து பாதுஷா போன செய்தியும் அடங்கியது. இதை அரபு கிதாபுகளிலிருந்தும் மொழிபெயர்த்து இனிய செந்தமிழில் எழுதி அச்சிட்டு வெளிவந்திருக்கிறது. இதுநாள்வரை இந்த சரித்திரம் அச்சிட்டு வெளிவந்ததே இல்லை பார்க்கத்தக்கதே யாகும்.

விலை மிக்க சகாயம், தமிழ் அணா 0—4—0

ஷை அரபு தமிழ் அணா 0—5—0

ஹிந்துல் ஒலி அதாயிர் றசூல், காஜா முஈனுத்தீன், ஜிஷ்தி ஆண்டவர்கள் காரணச் சரித்திரம்.

இது (அஜ்மீறில் அடங்கி யிருக்கின்ற) நாயகம் காஜா முஈனுத்தீன் ஜிஸ்தி, குத்திஸ் சிர்றகு அவர்களின் காரண ஜீவிய சரித்திரங்களிலும் அவர்கள் (ஹிந்துஸ்தான்) ராஜ்யத்தில் வந்திறங்கி அஜ்மீரில் மாந்திரீக ஜீபா வென்பவனுடன் எதிர்த்துப் போர் செய்து வந்த அனேக விசேஷங்களும், அவன் தன் மாந்திரத்தால் ஆயிரக்கணக்கான விருக்ஷங்களை நெருப்பு மழைபெய்ய செய்வித்து அவைகளைச் சாம்பலாக்கின விவரத்தையும், அவன் ஆஜிசாகி இஸ்லாமான விவரத்தையும், நாயகம் அவர்களால் அங்கு இஸ்லாம் விர்த்திக்கு வந்ததும், முந்தி (திஹ்லி) பட்டணத்தில் இஸ்லாமுடைய இராஜதானி ஏற்பட்டிருந்த விஷயத்தையும், அவர்கள் தர்க்கா ஷரீபுடைய படங்களையும், சரித்திர முடிவில் எழுதி காட்டப்பட்டிருக்கிறது. பார்க்கத் தக்கதேயாகும்.

சுத்த தமிழ் அணா 14 ஷை அறபுத் தமிழ் ரூ. 1

ஸைபுல்இஸ்லாம் பிலிரத்தில் கில்ரு அலைஹிஸ்ஸலாம்.

இதாகிறது; நாயகம் கிலுரு அலைஹிஸ்ஸலாமின் காரணசரித்திரத்திலும், சுல்த்தான் சிக்கந்தர் துல்கர்னைன் கிஸாக்களும்; அனேக நுட்பமான விஷயங்களும், அடங்கியிருக்கிறது.

சுத்த தமிழ் விலை அணா 6

ஷை அறபுத் தமிழ் விலை அணா 14

புதிதாய் வெளிவந்த சரித்திரம்
இதுவரையில் வெளிவந்ததே கிடையாது.

தாரீகுல் அவுலியா.

கனவான்களே, நம் இந்திய தேசத்தில், ஹிந்துஸ்தான், மாகாணத்தில் சூரியனைப்போல் வந்துதிக்கும் கீர்த்தியும் புகழும் சிறந்தோங்கி விளங்குகின்ற அவுலியாக்கள் ஸாலிஹீன்களின் உன்னதமான அரியபெரிய மகிமை வாய்ந்த ஜீவியகாரண கருமாத்து சரித்திரங்களைப் படித்துணர்வது நம்தேசத்து ஒவ்வொரு முஸ்லீம்களுக்கும் அவசியமே யாகும். ஆகவே அந்த நாயகங்களின் சரித்திர வாலாறுகளைப் பார்ஸி, ஹிந்துஸ்தானி, பாஷைகளில் ஹிந்துஸ்தான் தேசத்தின் (உலமாக்களால்) எழுதப்பட்டிருந்தன. அதை இதுவரை யவராலும் தமிழ்ப் பாஷையில் மொழி பெயர்க்கப்படவில்லை எனினும் நமது முஸ்லீம்களில் அநேகர்கள் அப்பாஷை அறியாததினிமித்தம் அவைகளைப் படித்து அறியக்கூடவில்லை ஆனதுபற்றி நமது இந்நாட்டு முஸ்லீம்கள் அறிந்துக் கொள்ளும் பொருட்டு அருமபிரயாசையுடன் இனிய செந்தமிழ் நடையில் மொழி பெயர்த்து ஆங்காங்கு அவர்கள் அடங்கி இருக்கும் தர்காஷரீபின் படங்களையும் எழுதி காட்டி அச்சிட்டிருக்கின்றோம். படங்கள் ஒவ்வொன்றும் பார்க்கத்தகுந்ததே யாகும். இப்படிப்பட்ட புத்தகம் இதுவரையில் வெளிவந்ததில்லை என்பது எவரும் நன்கு அறிவர் இதை நீங்கள் வாசிக்க ஆரம்பித்தால் சரித்திரம் முடியும்வரையில் புத்தகத்தை கீழ்வைக்க மனம்வராது. விலை மிக்க சகாயம் 1-வது பாகம் அணா 14 இதின் மற்ற 2-3-பாகங்கள் விரைவில் வெளிவரும்.

5-புத்தகம் மொத்தமாக வாங்கினால் 1-புத்தகம் இனாம்

கவாகிபுல், அன்வார், பீமனாகிபில், குத்பி,
ஸிந்தா, ஷாஹ்மதார்.

இது; (மக்கன்பூர்) என்னுமூரில் அடங்கியிருக்கும் குதுபுல் அக்தாப் செய்யிதினா பதீஉத்தீன் ஸிந்தா ஷாஹமதார் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் பிறப்பு வளர்ப்பு காரண கருமாத்து ஜீவிய சரித்திரங்களிலும், அவர்கள் ஹிந்துஸ்தானுக்கு வந்து இஸ்லாமின் ஒழுங்குகளை நிலைநிறுத்தி இஸ்லாமைப் பரவச்செய்த விஷயங்களிலும், அத்துடன் அநேக நுட்பமான செய்திகளும், அருமையான ஹிகாயத்து கிஸ்ஸாக்களும் அடங்கியிருக்கிறது. அறபுத்தமிழ் மௌலவீதுடன் அடங்கியது. விலை ரூ 1—8—0

டை சுத்த தமிழ் ரூ. 1—0—0

எமது விலாசம்:—

பு. காஜா முகம்மது ஆலிம் சாயபு,
கம்பெனி, மதரஸா, முச்சித்தெரு,
திருவள்ளூர், மதறாஸ்.